# கோயமுத்தூரிலிருந்து ட்ரங்க்கால்...

இனிய வாசக நெஞ்சங்களுக்கு!

அட்வான்ஸ் தீபாவளி [illegible]ழ்த்துக்களோடு என் வழக்கமான அன்பு வணக்கம். இந்த புத்தாயிரம் ஆண்டில் வந்துள்ள இந்த முதல் தீபாவளி உங்கள் வாழ்க்கையை வசந்த காலமாகவே வைத்திருக்கட்டும். வருத்தங்களும் வேதனைகளும் தீப ஒளியில் காணாமல் போகட்டும். நல்லது மட்டுமே உங்கள் வாசல் தேடி வரட்டும். பொல்லாத எதிரிகள் பொடிப் பொடியாகட்டும். நல்லவர்களின் ஆசிகள் உங்களை நனைக்கட்டும். வாழ்க்கையோடு கொஞ்சம் ஆன்மீகத்தையும் கலந்து கொள்ளுங்கள். வரப் போகும் நாட்களில் உங்கள் வீட்டில் சந்தோஷக்காற்று மட்டுமே வீசிக்கொண்டிருக்கும்.



''ராஜேஷ் ஸார்...! ஹோல்ட் ஆன்... ஹோல்ட் ஆன்''

''யாரு...இப்பவே க்ரால் பண்றது...?''

''ஸார்...நான் சரவணன் ஃப்ரம் திருப்பூர்...!

''இப்பவே க்ரால் பண்ணிட்டுக்காக ஸாரி...''

''எதுக்காக இப்படியொரு அவசர க்ராலிங்...?''

''போன வெள்ளிக்கிழமை விஜய் டி.வி.யில் ஒரு ப்ரோக்ராம் பார்த்தேன். நல்வாழ்க்கைக்கு ஆன்மீகம் தேவையில்லை. நல்வாழ்க்கைக்கும் ஆன்மீகத்துக்கும் சம்பந்தம் இல்லை என்ற தலைப்பில் ஒரு பட்டிமன்றம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் பட்டி

(தொடர்ச்சி 3 ஆம் அட்டை...)

# க்ரைம் நாவல்

க்ரைம் நாவல் - 159 அக்டோபர் - 2000

## எடிட்டர் ஏரியா

தீபாவளிச் சிறப்பிதழ்

என் இனிய வாசக நேசங்களுக்கு

வணக்கம்!

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் என் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

உங்களின் எண்ணங்களும், குறிக்கோள்களும் ராக்கெட்டுகளைப்போல் உயர்ந்து பறந்து வெற்றியடையட்டும்.



உங்களது உழைப்புக்கு ஓய்வு தராது 'சங்கு சக்கரம்' போல் சுறுசுறுப்புடன் சுத்திச் சுத்தி காசு பணம் சம்பாதியுங்கள்!

நமது வளர்ச்சிகளையும், வாய்ப்புகளையும் கண்டு பொறாமைப்படும் நம் இனிய எதிரிகளின் நினைப்புகள் புஸ்வாண




(2 ஆம் அட்டைத் தொடர்ச்சி)

மன்றத்தில் நீங்களும் ஒரு வி.ஐ.பி.யாக உட்கார்ந்து கலந்து கொண்டீர்கள். அந்தப் பட்டி மன்றத்தில் நீங்கள் பேசிய தலைப்பு என்ன தெரியுமா ஸார்...?"

"தெரியும்... நல்வாழ்க்கைக்கும் ஆன்மீகத்துக்கும் சம்பந்தம் கிடையாது என்று பேசினேன்"

"இது உங்கள் கொள்கைக்கு விரோதமான கருத்து அல்லவா...? எப்படி அந்த தலைப்பில் பேச ஒப்புக் கொண்டீர்கள்...?"

"தப்புதான் சரவணன்...! அது. பட்டி மன்றத்துக்காக பேசப்பட்ட தலைப்பு. அதை சீரியஸாக எடுத்துக்க வேண்டாம். மாற்றுக் கருத்து சொன்னால்தான் மற்றவர்கள் மனதில் இருக்கிற எண்ணங்கள் வெளியே வரும். நான் அந்தப் பட்டி மன்றத்தில் போட்டது நிழல் சண்டைதான். உண்மையில் ஒரு மனிதனுக்கு நல்ல வாழ்க்கை அமைய ஆன்மீகம் அவசியம் தேவை."

"நீங்க இப்படி சொன்ன பிறகுதான் என் மனசுக்கு கொஞ்சம் நிம்மதியாக இருக்கு ஸார்..."

"எனக்கும் அதே...அதே..."

"இது யாரு புதுக்குரல்...? தமிழ் வேற கொஞ்சம் கொச்சையா இருக்கு..."

"ராஜேஷ் ஸார்... நான் ஸ்டாலின் ஃப்ரம் யு.எஸ்.ஏ..."

"இ.எஸ்.டி. லைனிலிருந்து எஸ்.டி.டி. லைனை எப்படி க்ராஸ் பண்ணினீங்க...?"

"அடுத்த மாச க்ரைம் நாவலோட தலைப்பை தெரிஞ்சுக்க ஆசைப்பட்டேன். ரொம்ப நேரமா ட்ரை பண்ணி பிடிச்சுட்டேன். தலைப்பைச் சொல்றீங்களா... ஸார்"

"இதோ தலைப்பு..."

"சொல்லுங்க... சொல்லுங்க..."

**"விவேக் நாட் அவுட்...!"**

"டக்கர் டைட்டில் ஸார்..."

"டொக்!"

மிக்க அன்புடன்

ராஜேஷ்குமார்.

# 2021-ல் காய்கறிக்கு குட்பை?

-ராஜேஷ்குமார்



அர்த்தமுள்ள அரட்டை

விவேக் காரை போர்டிகோவில் நிறுத்தி விட்டு வீட்டுக்குள் நுழைந்து சோபாவுக்கு சாய்ந்து ஷூலேஸ்களை கழற்றிக் கொண்டிருக்கும்போதே ரூபலா உள்ளேயிருந்து வேக வேகமாய் வந்து விவேக்கிற்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"என்னங்க... நம்ம பூமியுருண்டையில் எந்த நாட்டை பூமத்திய ரேகை க்ராஸ் பண்ணிப் போகுது...?"



விவேக், ரூபலாவை வியப்பாய்ப் பார்த்தான்.

"என்ன ரூபி... இது...! ஒரு கேஸ் விஷயமா வெளியே போய் அலையா அலைஞ்சுட்டு நல்ல பசியோடு வந்திருக்கேன். இப்ப வந்து கேட்கிற கேள்வியா இது...?"

ரூபலா நோகாமல் தலையில் அடித்துக் கொண்டாள்.

"அய்யோ... என்னோட மானம் போகாமே இருக்கணும்ன்னா நீங்க இதுக்கு உடனே பதில் சொல்லியாகணும்..."

"உன்னோட மானத்துக்கும் பூமத்திய ரேகைக்கும் அப்படியென்ன தொடர்பு...?"

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி பக்கத்து வீட்டு சந்தேகட்டல் சங்கீதா வந்து இந்தக் கேள்வியைக் கேட்டா..."

"தெரியலையாக்கும்..."

"ஆமா..."

"நீதான் ஹிஸ்டரி, ஜியாக்ரபியில் புலியாச்சே. பதில் சொல்ல வேண்டியதுதானே...?"

"எப்பவோ படிச்சது மண்டைக்குள்ளே இன்னுமா உட்கார்ந்துகிட்டு இருக்கும்? எப்பவோ ஆவியா போயிருச்சு... அந்த சங்கீதா பிசாசுகிட்ட அதையெல்லாம் சொல்லிக்கிட்டு இருக்க முடியுமா...?"

"பின்னே எப்படித்தான் சமாளிச்சே...?"

" 'ஆன்ட்டிக்கு இப்போ ரொம்பவும் தலைவலியா இருக்கு. ஒரு மணி நேரம் கழிச்சு வா'ன்னு சொல்லி அனுப்பிட்டேன். அவ போய் அரை மணி நேரமாச்சு. எப்படியும் அரை மணி நேரம் கழிச்சு வந்துருவா...?"

"அதுக்குள்ளே உனக்கு பதில் வேணும்..."

"ஆமா..."

"பூமத்திய ரேகை நம்ம பூமியுருண்டையில் எந்த நாட்டை க்ராஸ் பண்ணிப் போகுது- இதுதானே சங்கீதா கேட்ட கேள்வி...?"

"ஆமா... ஆமா..."

"பூமியின் மத்தியில் வரையப்பட்டுள்ள ஒரு கற்பனைக் கோடுதான் பூமத்திய ரேகை. இந்த ரேகை பூமியை இரு அரைக் கோளங்களாக பிரிக்குது. கிழக்கு ஆப்ரிக்காவில் உள்ள கென்யா நாட்டை இந்த பூமத்திய

ரேகை க்ராஸ் பண்ணுது. இன்னும் துல்லியமா சொல்லணும்ன்னா கென்யா நாட்டின் எல்டோரெட் நகரிலிருந்து கிசுமா என்னும் நகரத்துக்கு போகும் ரோட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இந்த பூமத்திய ரேகை கடந்து செல்கிறது. இந்த ரேகை கடந்து செல்லும் இடம் இப்போது ஒரு சுற்றுலாத் தலமாகவே மாறிவிட்டது. ஹோட்டல்கள், காட்டேஜ்ன்னு ஒரே அமர்க்களம். சுற்றுலாப் பயணிகளும் இந்த இடத்துக்கு வருஷம் பூராவும் வந்துகிட்டே இருக்காங்க..."

"பூமத்திய ரேகை பகுதியில் வெய்யில் அதிகமாய் இருக்க என்ன காரணம்...?"

"சூரியனின் கதிர்கள் இந்த இடத்தில் வருஷம் பூராவும் செங்குத்தாகவே விழறதாலே வெய்யில் அதிகம்..."

"வெய்யில் எவ்வளவு டிகிரி இருக்கும்...?"

"மே மாத மெட்ராஸ் வெய்யில் மாதிரி 107 டிகிரி வரைக்கும் போகும்... கென்யாவின் மக்கள் தொகை இரண்டரை கோடி மட்டுமே. மக்கள் தொகை விஷயத்தில் ரொம்பவும் சிக்கனம். காரணம் மக்கள் தொகை பெருக்கம் அதிகமானால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு பஞ்சம் வந்துடுமோன்னு பயம்..."

"முன்ஜாக்ரதையான மக்கள்தான்..."

"பூமத்திய ரேகை சந்தேகம் தீர்ந்தது... இன்னிக்கு என்ன லஞ்ச்...?" விவேக் கேட்டுக் கொண்டே டைனிங் டேபிளை நோக்கிப் போனான். ரூபலா பின் தொடர்ந்தாள்.

"இன்னிக்கு லஞ்ச் ரொம்பவும் சிம்பிள். லெமன் ரைஸ், பீட்ரூட் சாம்பார், காரட் பொரியல், மோர்க் குழம்பு, அப்பளம், கோதுமை பாயசம்..."

"சொல்லாதே... பசி ஜாஸ்தியாகுது." டைனிங் டேபிளுக்குப் போய் உட்கார்ந்தான் விவேக். தட்டை எடுத்து வைத்து எல்லாவற்றையும் பரிமாறினாள், ரூபலா.

விவேக் காரட் பொரியலில் கை வைத்துக் கொண்டே கேட்டான்.

"இன்னிக்குக் காலையில் பேப்பர் பார்த்தியா ரூபி...?"

"இல்லையே பேப்பர்ல என்ன விசேஷம்...?"

"இன்னும் இருபது வருஷத்துக்கப்புறம் அதாவது



# கென்யா நாட்டை க்ராஸ் பண்ணும்




2021 ஆவது வருஷத்தில் ஜனங்கள் காய்கறி சாப்பாட்டை விட்டுவிட்டு வேறு வகையான சாப்பாட்டுக்கு மாற வேண்டியிருக்குமாம்..."

"ஏன் அப்படி...?"

"இருபது வருஷத்துக்குப் பின்னாடி உணவு உற்பத்தியும் காய்கறி விளைச்சலும் மிக மோசமாய் பாதிக்கப்படலாம்ங்கிறது விஞ்ஞானிகளோட கருத்து..."

"பாதிக்கப்பட என்ன காரணம்...?"

"ஓஸோன் ஓட்டை பெரிசாயிட்டே போறதுதான். இப்போ உள்ள நிலவரப்படி அந்த ஓட்டைக்குள்ளே ஒரு இந்தியாவையே தூக்கிப் போடலாமாம்..."

"அம்மாடி... அவ்வளவு பெரிய ஓட்டையா...? எப்படி பெரிசாயிட்டே போகுது...?"

"மக்கள் உபயோகப்படுத்தற வாகனங்கள் எலக்ட்ரானிக் சாதனங்கள் மூலமா காற்றில் கார்பன் அதிகமா கலந்து ஓஸோன் மண்டலத்தை அரிச்சா அதுல ஓட்டை விழாமே இருக்குமா...? அதுவும் ஓட்டை எங்கே விழுந்திருக்கு தெரியுமா...?"

"எங்கே...?"

"அண்டார்டிகா கண்டத்துக்கு மேலே..."

"அங்கே விழுந்தா என்ன பிரச்னை...?"

"சரியா போச்சு... சூரியனோட மேற்பரப்பிலிருந்து

வெளிப்படற அதிகப்படியான வெப்பம் புற ஊதாக்கதிர்கள் இவைகளிலிருந்து பூமியைக் காப்பாத்துறதே இந்த ஓஸோன் மண்டலம்தான். இதுல ஓட்டை விழுந்தா எப்படி...? சூரியனிலிருந்து வெளிப்படற புற ஊதா கதிர்கள் நேரிடையாய் அண்டார்ட்டிகா பனிப்பிரதேசத்தைத் தாக்கும்போது பனிப்பாறைகள் உருகி தண்ணீராக மாறி கடல்களில் கலக்க, கடல்களின் நீர் மட்டம் உயர்ந்து கடலோரங்களையும் நிலபுலன்களை அழிக்கும். விளைநிலங்களில் கடலின் உப்புச்சுவை ஏறினால் நிலங்களில் எதுவுமே விளையாது. கடல் நீரை எப்படி குடிக்க பயன்படுத்த முடியாதோ அதே மாதிரி கடல் நீர் புகுந்த நிலங்களையும் நாம உபயோகப்படுத்த முடியாது. உணவு உற்பத்தித் திறனும் காய்கறி விளைச்சலின் அளவும் அதலபாதாளத்துக்கு போய்விடும்..."

"என்னங்க யாகவா முனிவர் மாதிரி இப்படி பயமுறுத்தறீங்க...?"

"இது நடக்கப் போகிறது நிஜம் ரூபி. அது மட்டும் இல்லை. சூரியனின் புற ஊதாக்கதிர்கள் நேரிடையாய் பூமியை நோக்கி பாயும்போது மனிதனுக்கு புதுப்புது நோய்கள் உண்டாகும். இப்பவே டாக்டர்களால் கண்டு பிடிக்கப்படாத நோய்கள் பல இருக்கு. அந்த லிஸ்ட்ல இன்னும் பல நோய்கள் இடம் பிடித்துக் கொள்ளும்..."

"இந்த ஓஸோன் ஓட்டையை அடைக்க முடியாதா...?"

"சைக்கிள் ட்யூப்ல பஞ்சர் போடற மாதிரி அந்த ஓட்டையை அடைக்க முடியாது. ஓட்டை மேற்கொண்டு பெரிசாகாமல் இருக்க என்ன செய்யலாம்ன்னு விஞ்ஞானிகள் யோசனை பண்ணிட்டு இருக்காங்க. பட்... ஓஸோன் ஓட்டை மேன்மேலும் பெரிசாகத்தான் வாய்ப்பு அதிகம். காற்றில் கார்பன் கலப்பதை தடுக்காத வரை இதுக்கு விமோசனம் கிடையாது. பூமியைத் தவிர மற்ற கிரகங்களில் உயிரினம் எதுவும் கிடையாது. அதே போன்ற நிலைமை ஓஸோன் ஓட்டை பெரிதாகும்போது பூமிக்கும் ஏற்படலாம்ங்கிறது விஞ்ஞானிகளோட கணிப்பு. செவ்வாய், வியாழன் போன்ற கிரகங்களில் பல நூறு கோடி ஆண்டுகளுக்கு முன்பு உயிரினங்கள் இருந்து



அங்கும் ஓஸோன் ஓட்டை போன்ற பிரச்னை ஏற்பட்டு உயிரினங்கள் அழிந்து போயிருக்கலாம். அல்லது செவ்வாய், வியாழனில் வாழ்ந்த மனிதன் இந்த பூமி கிரகத்துக்கு வந்து குடியேறியிருக்கலாம்.

"சரிங்க... இந்த ஓஸோன் வாயுங்கிறது என்ன வாயு... அது ஒரே வாயுவா... இல்லை பல வாயுக்களின் கலவையா...?"

வாசகர்களே!

ரூபலா கேட்ட கேள்விக்கு உங்களுக்கு பதில் தெரியுமா...? தெரிந்தால் ஒரு போஸ்ட் கார்டு எடுங்கள். பதில் எழுதி 30.10.2000 தேதிக்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அந்தமுள்ள அட்டை
க்ரைம் நாவல்
ஜீயே பப்ளிகேஷன்ஸ்
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

சரியான பதில் எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 5 வாசகர்களுக்கு புத்தகங்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும். இனி சென்ற மாத கேள்வியும் பதிலும்.

கேள்வி: கன்கார்ட் விமானம் மணிக்கு எத்தனை கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும்?

பதில்: 2500 கிலோமீட்டர்.

**சரியான விடை எழுதி குலுக்கல் முறையில் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்:**

1. ஏ. சிராஜுதீன், வாணியம்பாடி.
2. வி. தங்கக்கனி, விருதுநகர்.
3. எஸ். மாலதி சிவராமன், சென்னை - 14.
4. பிரேம் கிருஷ்ணா, ஹைதராபாத் - 41
5. மதுமலோ பிரியா, சென்னை - 17.



# கடவுளை வணங்குவதால் கஷ்டங்கள் தீருமா?

♦ சிட்னி ஒலிம்பிக்கில் கர்ணம் மல்லேஸ்வரிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது குறித்து...?

- ரா.பாலசி, மருடஞ்சாவடி (சேலம்).



## ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

★★ பெருமைப்பட வேண்டிய விஷயம். முதன் முதலாக ஒரு இந்தியப் பெண் ஒலிம்பிக்கில் பதக்கம் பெறுவது நிச்சயம் வரலாற்று நிகழ்ச்சிதான். இந்தியாவின் நூறு கோடி பிரஜைகளும் சந்தோஷப்பட வேண்டிய தருணம் இது. ஆனால் இதில் ஒரு சின்ன நெருடலும் உண்டு. மல்லேஸ்வரி உண்மையில் தங்கம் வென்று இருக்க வேண்டியவர். முதலில் (அதாவது ஆறு மாதத்துக்கு முன்பு) அவர் 54 கிலோ எடைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார். அந்த எடைப் பிரிவிலேயே அவர் போட்டியிட்டு இருந்தால் நிச்சயம் தங்கம் வென்று இருப்பார். ஆனால் மல்லேஸ்வரி உணவுக் கட்டுப்பாட்டை மீறி பீர், வறுத்த கோழி என்று இஷ்டத்துக்கு சாப்பிட்டதன் காரணமாய் உடம்பு பெருத்து வெயிட் அதிகமாகி 63 கிலோ எடைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அப்போதாவது அவர் உணவுக் கட்டுப்பாட்டில் அக்கறை செலுத்தியிருக்கலாம். ஆனால் அவர் அக்கறை செலுத்தாமல் மேலும் கண்டபடி சாப்பிட்டு வைக்க உடம்பு மேலும் பருத்து 69 கிலோ எடை பிரிவுக்கு மாற்றப்பட்டார், இந்த எடைப் பிரிவில் உள்ள அமெரிக்கா, சீனா, ஜப்பான், ரஷ்ய வீராங்கனைகளை வெல்வது மிகமிக கஷ்டம். அப்படியிருந்தும் கஷ்டப்பட்டு வென்று வெண்கலப் பதக்கம் பெற்ற மல்லேஸ்வரி உணவுக் கட்டுப்பாட்டில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்து வெயிட் ஏறாமல் பார்த்து இருந்தால் 54 கிலோ எடைப் பிரிவில் தங்கம் வென்று இருப்பார். உடலைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள மனக்கட்டுப்பாடு அவசியம். நயீம் சுலேமனோக்லு என்ற துருக்கியர் 1988, 1992, 1996 ஒலிம்பிக் போட்டிகளில் ஃபெதர் வெயிட் பிரிவில் தொடர்ந்து மூன்று தடவை தங்கம் வென்றார். எட்டு வருட காலம் அவர் தன் எடையை ஒரே மாதிரி வைத்து இருந்தார். அதே போல் நம் மல்லேஸ்வரியும் செய்து இருந்தால்

இந்நேரம் அவர் கழுத்தில் தங்கப்பதக்கம் ஜொலித்துக் கொண்டு இருக்கும். எது எப்படியிருந்தாலும் இந்தியாவின் மானம் காத்த மல்லேஸ்வரி வாழ்க!

✱ வீரப்பனைப்பிடிக்க நம் ராணுவத்தை அனுப்பினால் என்ன?

- பொ.சுந்தரமூர்த்தி, ஜெயங்கொண்டான்.

✱✱ ராஜ்குமார் பத்திரமாய் திரும்பியதும் இனி அரசாங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக அது இருக்கலாம். ஏனென்றால் சுப்ரீம்கோர்ட் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு விட்ட டோஸ் அப்படி. ராஜ்குமாரின்விடுதலைக்குப்பிறகு வீரப்பன்நிம்மதியாக இருக்கமுடியாது.

✱ டி.வி.யில் வரும் மெகா தொடர்கள்பற்றி?

- வி.எஸ்.தெய்வநாயகன், திருவாடானை.

✱✱ சமீபத்தில் கிடைத்த ஒரு ஆராய்ச்சி தகவல் கவலையைத் தரக்கூடிய தகவலாக அமைந்துள்ளது. மெகா தொடர்களை பார்ப்பதன் மூலம் தமிழ் பெண்களுக்கே உரித்தானவிருந்தோம்பல்பண்பு மெல்ல மெல்ல அழிந்து வருகிறது. மெகா தொடர்கள் ஒளிபரப்பாகும் நேரத்தில் விருந்தினர்கள் யாராவது வந்துவிட்டால் அவர்களை வேண்டா வெறுப்பாக வரவேற்பதும் மனசுக்குள் அவர்களைத் திட்டுவதும் வாடிக்கையாகி வருகிறது. ஒரு கல்யாணவீட்டில் இரண்டு பெண்கள் பேசிக் கொள்வதை நான் கேட்க நேர்ந்தது. இதோ அந்த உரையாடல்.

ஒரு பெண்: என்ன... நேத்து ராத்திரி "சித்தி" சீரியல் பாத்தியா?

இன்னொரு பெண்: (எரிச்சலோடு) எங்கேபாக்கறது... அந்த நேரம் பார்த்து என் மாமியார் கிழம் கீழே விழுந்து ஒரே அமர்க்களம். செத்து தொலைக்காமே உயிரை வாங்கிட்டிருக்கு. நிம்மதியா அரைமணி நேரம் டி.வி பார்க்கமுடியலை. எதுக்கும் கொடுத்துவெச்சிருக்கணும்.

✱ கர்நாடகாவில் வாழும் தமிழர்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால்நாம் என்ன செய்ய வேண்டும்?



- கம்பம்.ஆர்.ரமேஷ், கம்பம்.

✱✱ தேவையற்ற இந்த பிரச்னைக்கு காரணமான வீரப்பனை சபிக்க வேண்டும்.

✱ கிரிக்கெட் இனி எடுபடுமா...?

- என்.லட்சுமிஸ்ரீனிவாசன், ஸ்ரீரங்கம்.

✱✱ ஊழல் அரசியல்வாதிகளையும், பேட்டை ரௌடிகளையும் எம்.எல்.ஏ.க்களாகவும் எம்.பி.க்களாகவும் மாற்றிக் கொண்டிருக்கிற நம் இந்திய மக்கள் கிரிக்கெட் வீரர்களின் ஊழல்களையும் மறந்து கிரிக்கெட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கத்தான் செய்வார்கள். நாட்டின் மானத்தையே அடகு வைத்து பணத்துக்காக வேண்டுமென்றே தோற்றவர்களை சட்டம் நிச்சயமாக தண்டிக்கப்போவது இல்லை. கிரிக்கெட்டையே பார்க்காமல் நம் மக்களாவது தண்டிக்க வேண்டும். கிரிக்கெட் விளையாட்டு நடக்கும்போது ஸ்டேடியம் காலியாக இருப்பதைப் பார்த்து கிரிக்கெட் வீரர்கள் திகைக்க வேண்டும். டி.வி.யிலும் விளையாட்டைப் பார்க்காமல் வேறு சேனலுக்கு போய்விட வேண்டும். இப்படி நடக்குமா...? எனக்கு நம்பிக்கையில்லை. நம் மக்களுக்கு மறதியும் அதிகம்; மன்னிக்கிற பக்குவமும் அதிகம். எதையும் ஜீரணித்துக் கொள்ளபழகிவிட்டார்கள். ஸோ... கிரிக்கெட் மறுபடியும் எடுபடும்.

# இந்தியாவின் பெரிய நகரங்களை 'காஃரி' ஏவுகணை மூலம் ஐந்து நிமிட நேரத்தில் அழித்துவிட முடியும் என்று பாகிஸ்தான் விஞ்ஞானி அப்துல் காதிர்கான் மிரட்டியுள்ளாரே?

- ஜேம்ஸின் ரமேஷ், மதுரை.

## இந்த ஏவுகணைகள் எல்லாம் நமக்கு வெறும் காகித அம்புகள் என்று நம் அப்துல்கலாம் சொல்லியிருக்கிறார். பாகிஸ்தான் மீண்டும் பாடம் கற்றுக் கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை.

# பெண் ஒரு புதிர் என்பது உண்மைதானா...?

- பா.ஆறுமுகம், தஞ்சாவூர்.

## உண்மையோ உண்மை. உதாரணம்: ஒரு பெண் தனது மகள் திருமணம் முடிந்த உடனேயே தனிக்குடித்தனம் செல்ல ஆசைப்படுவது அல்லது தூண்டுவது. ஆனால் தனது மகன் மட்டும் திருமணம் முடிந்ததும் தனிக்குடித்தனம் செல்வதை விரும்பாதது.

# திருமணம் என்பது இன்பமா...? துன்பமா...?

- எஸ்.ஜெயகாந்தன், புன்செய் புளியம்பட்டி.

## அது க்ராக் ஜாக் பிஸ்கெட் மாதிரி. 50% 50%.

# கடவுளை வணங்கினால், நம் கஷ்டங்கள் தீர்ந்துவிடுமா?

- என்.சண்முகம், திருவண்ணாமலை.

## நம் கஷ்டங்களை ஒரு நண்பனிடம் சொன்னாலே பாதி பளு குறைந்த மாதிரியான உணர்வு ஏற்படுவது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை கடவுளை வணங்கும்போது நம் கஷ்டங்கள் குறைவதும். கடவுளை வணங்கி கஷ்டங்கள் குறைந்த காரணத்தினால்தான் இவ்வளவு கோவில்கள். காரணம் இல்லாமல் கோவில்கள் கட்டப்படவில்லை. நம் நியாயமான கோரிக்கைகளுக்கு கடவுள் செவி சாய்க்கிறார் என்பது உண்மையிலும் உண்மை. மிகப் பெரிய உண்மை.

# மனிதனுக்கு மதம் தேவையா?

- அரு.சூர்யநாராயணன், கும்பகோணம்.



## மதம் என்றால் வெறி என்று அர்த்தம். யானைக்கு வெறி பிடித்துவிட்டால் அதற்கு மதம் பிடித்துவிட்டது என்றுதான் சொல்கிறோம். இப்போது சொல்லுங்கள். அந்த மதம் தேவையா?

# வாஜ்பாயின் அமெரிக்கப் பயணம் எப்படி?

- எ.முரளிகிருஷ்ணன், நெய்வேலி.

## கடுமையான மூட்டுவலியையும் பொருட்படுத்தாமல் மேற்கொண்ட அந்த அமெரிக்கப் பயணம் அமெரிக்காவுக்கும் நமக்கும் இடையே இருந்த பல முட்டுக்கட்டைகளை நீக்கியுள்ளது. வாஜ்பாயின் அமெரிக்க விஜயத்தால் பாகிஸ்தானும் சீனாவும் மிரண்டு போயுள்ளன. ரஷ்ய அதிபரின் (புதின்) வருகை இந்தியாவுக்கு இன்னும் பலம்.

# திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்வது சரியா...?

- பெ.மீனாட்சி, திருக்குவளை.

## சரியில்லை. சொர்க்கத்தில் என்பதே சரி.

# ஒரு பொன்மொழி ப்ளீஸ்...?

- என்.கோபாலகிருஷ்ணன், பாண்டிச்சேரி.

## முதுகுக்குப் பின்னால் ஒரே ஒரு காரியம் மட்டும் செய்யலாம். அது அடுத்தவரின் முதுகைத் தட்டிக் கொடுப்பதுதான்.

பரிசுக்குரிய கேள்வியைக் கேட்டிருப்பவர்

**அரு.சூரியநாராயணன், கும்பகோணம்.**

ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள் பகுதிக்கு
கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:

ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்
க்ரைம் நாவல்
ஜீயே பப்ளிகேஷன்ஸ்,
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

## வாசகர் கடிதம்

சென்ற மாதம் வெளியான திஷா... திஷா... ஓடி வா இதுவரை உங்கள் கதைகளில் வராத புதிய "மோட்டிவ்"ஆக இருந்தது. கதையில் ஒவ்வொரு அத்தியாயம் முடியும் போதும் விறுவிறுப்பைக் கூட்ட வேண்டும் என்று சொல்ல திரு.சாவி அவர்களின் கூற்றை மீண்டும் மீண்டும் மெய் படுத்தி இருக்கிறார். ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள் பகுதியில் ஆர்.கே. சாரின் பதில்கள் ரொம்ப சுவையாக இருந்தது. கதாபாத்திரங்களுக்கு வைக்கப்படும் பெயர்கள் கூட புதிதாய் இருக்கிறது.

- விரமேஷ், கீரமங்கலம்.

திஷா... திஷா... ஓடி வா...! நாவலை என்ன சொல்லி பாராட்டுவது என்றே தெரியவில்லை? அத்தியாயத்திற்கு அத்தியாயம் விறுவிறுப்பு. பக்கத்திற்குப் பக்கம் சஸ்பென்ஸ் வாட்டன் சென்று முடிவு அருமையாக அமைந்தது! கொலைகளுக்கு காரணகர்த்தா டாக்டர் சந்திப்தான் என படிக்கும் வாசகர்களுக்கு இறுதிவரை எண்ண தோன்றாமல் எதற்காக சாலமன் விக்டரை கொல்ல முயற்சி நடந்தது. ஜெபமாலை ஏன் கொலை செய்யப்பட்டாள். செளந்தர்யாதேவி ஹார்ட் அட்டாக்கிலேதான் இறந்தாரா? ஜனலையை கொலை செய்தது யார்? ஜெபமாலை ஏன் திஷா என்ற பெயரில் செளந்தர்யாதேவியிடம் வேலைக்கு சேர்ந்தாள்? என்ற எண்ணற்ற முடிச்சுகளை அண்ணன் ராஜேஷ்குமார் ஒரு சிக்கலும் விழாமல் அழகாக ஒவ்வொரு முடிச்சாக அவிழ்த்து கடைசியில் திஷா இல்லை ஜெபமாலையை சாலமன் விக்டருடன் சேர்த்து வைத்து காதலுக்கு மரியாதை செய்த எங்கள் அண்ணன் ஆர்.கே. வாழ்க பல்லாண்டு!

க்ரைம் நாவல் மொத்தத்தில் ஒரு குடும்ப நாவலாக ஆகிவிட்டது. அதை அழிக்க முடியாது. ஆர்.கே.வும் ஜி.கே.வும் இருக்கும் வரை!

- எஸ்.செல்வம், சேலம்.

க்ரைம் 158 "திஷா... திஷா... ஓடி வா" கண்டேன். மனமகிழ்வு கொண்டேன். சவப்பெட்டியில் கல்லறைக்குள் சென்ற ஜெபமாலை மீண்டும் உயிர் பெற்று எழுந்து வந்து வாசகர்களை மகிழ்வித்தார்.

அண்ணனின் நாவல்களும் பிற்கால தமிழர்களுக்கு ஆழ்வாராய்ச்சியாளர்களின் மூலம் வெளிப்படுத்தப்படும்.

- வே.கதிர்வேல், திருவேற்காடு.



# அன்பே இந்தியா!

- ராஜேஷ்குமார்

## 1

அதிகாலை நான்கு மணி. காஷ்மீர் எல்லைப்பகுதி.

வெளியே பனி வெண்ணெயாய்ப் பெய்து கொண்டிருக்க ராணுவ பாசறையை ஒட்டி ஒரே சீராய் முளைத்திருந்த க்வார்ட்டர்ஸ் கட்டிடங்கள் இருட்டில் புதைந்து போய் இருந்தன. ஒரே ஒரு க்வார்ட்டர்ஸ் மட்டும் மெல்லிய வெளிச்சத்தோடு விழித்துக் கொண்டு சின்னச் சின்ன சலனங்களை வெளிப்படுத்தியது.

நகுல் பெடர்மாவில் டீ தயாரித்துக் கொண்டிருக்க ரவி, பக்கத்தில் வந்து நின்றான். இரண்டு பேரும் ராணுவ யூனிஃபார்மில் - ஆறடி உயரத்தில் கம்பீரம் காட்டினார்கள். இரண்டு பேர்க்குமே சம வயது.

"மணி என்ன நகுல்...?"

"சரியாய் நான்காகுது..."

"ஜீப் எத்தனை மணிக்கு வரும்?"

"நாலரைக்கு..."

"போக வேண்டிய இடம்... பற்றி ஏதாவது சொன்னாங்களா...?"

"ஒண்ணும் சொல்லலை"

"எத்தனை பேரை இப்படி கூப்பிட்டிருப்பாங்க?"

"தெரியலை... போய்ப் பார்த்தாதான் தெரியும்"

"ஒரே குழப்பமா இருக்கு..."

நகுல் சிரித்தான். "ராணுவத்தோட மேலிடக்



கட்டளைகள் எப்பவுமே குழப்பமாத்தான் இருக்கும். அதை செயல்படுத்த வேண்டிய நேரம் வர்றபோதுதான் எதுவுமே புரியும்"

"நகுல்..."

"என்னாரவி...?"

"இப்பெல்லாம் என் மனசுக்குள்ளே ஒரு எண்ணம்..."

"சொல்லு..." இரண்டு கண்ணாடி டம்ளர்களில் டீயை ஊற்றி சர்க்கரை வில்லைகளை எடுத்துப் போட்டான் நகுல்.

ரவி தொடர்ந்தான். "அவசரப்பட்டு ஒரு முடிவு எடுத்து இந்த ராணுவத்துல வந்து சேர்ந்துட்டோமோன்னு அடிக்கடி என் மனசுக்குள்ளே ஒரு கன்டெலி எட்டிப் பார்க்குது"

"அந்த கன்டெலியை மொதல்ல விரட்டு..."

"விரட்ட முடியலை"

"அப்படியொரு எண்ணம் வர்றது தப்பாச்சே..."

"தப்புதான்... பட்... என்னால தவிர்க்க முடியலை."

ஒரு டம்ளரை எடுத்துக் கொடுத்தான் நகுல். "உனக்கு ஏன் அப்படிப்பட்ட எண்ணம் வருது...?"

"இன்னிக்கு இந்த தேசத்துல ஊழல் செய்யற அரசியல்வாதிகளும், நாட்டை அழிவுப்பாதைக்கு அழைச்சுட்டுப் போற தீவிரவாதிகளும்தான் தலைவர்களா இருக்காங்க. அந்தத் தலைவர்களை ஜனங்களும் ஏத்துக்கறாங்க... இப்பேர்ப்பட்ட தலைவர்களையும் மக்களையும் பாதுகாக்க ராணுவம் தேவைதானான்னு என் மனசுக்குப் படுது."

நகுல் ஒரு வாய் டீ குடித்துவிட்டு சிரித்தான். "எந்த நாட்டுலதான் ஊழல் இல்லை, தீவிரவாதம் இல்லை. ரவி...! நீ ஒரு உண்மையை யோசிச்சுப் பார்த்தியா?"

"என்ன...?"

"இந்தியாவில் எப்ப தேர்தல் நடந்தாலும் சரி ஓட்டுப் பதிவு அறுபது பர்சென்ட்டுக்கு மேல் போகவே போகாது... காரணம் என்ன தெரியுமா...?"

"என்ன...?"

"ஓட்டுப் போடாத அந்த நாற்பது பர்சென்ட் மக்கள் அரசியலையும் அரசியல்வாதிகளையும் வெறுக்கிற ரகம். எந்த வம்பு தும்புகளுக்கும் போகாத அப்பாவி மக்கள்.

அவங்களையாவது காப்பாத்த ராணுவம் வேணுமா வேண்டாமா...? எல்லாத்துக்கும் மேலா நம் நாட்டு எல்லைகளை தினசரி தொல்லைகளா மாத்திகிட்டு இருக்கிற பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு பாடம் புகட்டவாவது ராணுவம் வேண்டாமா...?"

ரவி உணவைக் குடித்து முடித்தான். காலி கண்ணாடி டம்ளரை பெரியசத்தத்தோடு டேபிளின்மேல் வைத்தான்.

"நகுல்...! நான் ஒரு கேள்வி கேட்டா நீ தப்பா நினைக்கமாட்டியே...?"

"நீ இன்னிக்கு எல்லாத்தையுமே தப்புத் தப்பாதான் கேட்டுகிட்டுஇருக்கே... எதை வேணும்னாலும் கேளு. அது தப்பா இருந்தாக்கூட தப்பா எடுத்துக்கமாட்டேன்."

ரவி சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு கேட்டான்.

"பாகிஸ்தானை நம்மால ஜெயிக்க முடியுமா?"

நகுல் ரவியை வியப்பாய் பார்த்தான். பின் மெல்ல கேட்டான். "நீ என்ன நினைக்கிறே...?"

"ஜெயிக்க முடியாதுன்னு என் மனசுக்குப் படுது"

"பாகிஸ்தானுக்கும் நமக்கும் இதுவரை மூணுதடவை போர் மூண்டிருக்கு. மூணுதடவையும் பாகிஸ்தானோட வாலை ஒட்ட நறுக்கியிருக்கோம். இது உனக்குத் தெரியுமா இல்லையா?"

ரவி தோள்களைக் குலுக்கினான்.

"அது பழைய கதை... இனிமே ஒரு போர் வந்தா பாகிஸ்தானை ஜெயிக்கிறது கஷ்டம்..."

"எங்கேயாவது கிளி ஜோஸியம் பாத்தியா?"

"இது கிளி ஜோஸியம் கிடையாது நகுல். 'தி கல்ப்' என்கிற ஒரு பத்திரிகையில் ஆப்கான் நாட்டு ராணுவத் தளபதி சொல்லியிருக்கார்..."

நகுல் சிரித்தான்: "பாகிஸ்தானுக்கு பக்கத்துல இருக்கிற நாடுகளில் யாருக்கு முதலிடம்னு போட்டி வெச்சா அந்த முதல் இடம் ஆப்கான் நாட்டு ராணுவத் தளபதிக்குத்தான் கிடைக்கும். ஒன்னை மட்டும் ஞாபகம் வெச்சுக்கோ ரவி... இந்தியாவை எந்தக் காலத்திலும் சரி பாகிஸ்தானால ஜெயிக்கவே முடியாது. பாகிஸ்தான்கிட்ட அணுஆயுத [illegible] றைய இருக்கலாம். ஆனா அதைவிட

பெரிய பலமான தைரியம் நம்மகிட்ட இருக்கு". நகுல் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறையின் மூலையில் பொருத்தப்பட்டு இருந்த அந்தச் சிறிய வயர்லெஸ் செட் சிவப்பு விளக்கை எரிய விட்டபடி 'பீப்... பீப்...' என்று குரல் கொடுத்தது.

நகுல் வேகமாய் போய் ஹெட்போனை எடுத்து காதுகளில் பொருத்திக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

"ஸார்... நான் நகுல்..."

மறுமுனையில் பண்டா செக்யூரிட்டி சீஃப் கமாண்டோ ஆபீஸர் சகோத்ரம் பேசினார்.

"நீயும் ரவியும் ரெடியாகி விட்டீர்களா...?"

"ரெடியாகிவிட்டோம் ஸார். ஜீப்புக்காக காத்துக் கொண்டிருக்கிறோம்"

"உங்களுக்காக ஜீப் வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் இருவரும் என்னை வந்து சந்திக்கப் போகிற விஷயம் வேறு யாருக்கும் தெரியாதே...?"

"தெரியாது ஸார். யாரிடமும் சொல்லக் கூடாது என்பதுதான் நீங்கள் இட்ட கட்டளையாயிற்றே...?"

"இனிமேலும் யாருக்கும் தெரியக்கூடாது. இது ஒரு 'இன்-காமிரா- ஆக்ஷன்'. செயல்பாடுகள் வெற்றி பெறும் வரை மற்றவர்களிடம் மௌனத்தைக் கடைப்பிடிப்பது மிகமிக முக்கியம்..."

"நானும் ரவியும் அதைக் கடைப்பிடிப்போம் ஸார்."

"உங்களை அழைத்துச் செல்ல வரும் ஜீப்பைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். இட்டாலி டைப் ஜீப். நெம்பர் AR.BTN 4676. ஜீப்பை ஓட்டி வரும் ட்ரைவரின் பெயர் பர்ஷாத். ரகசியப் பணிகளுக்காகவே நியமிக்கப்பட்ட ட்ரைவர். ஊமை. எழுதப்படிக்கத் தெரியாது. அவன் ஒரு ரோபோட் மாதிரி செயல்படுவான். ஜீப்பில் பயணம் செய்யும் போது நீங்கள் இருவரும் எதுவும் பேசக்கூடாது. இருபது நிமிஷப் பயணத்தை மௌனத்தில்தான் கழிக்க வேண்டும்..."

"எஸ்... ஸார்..."

"சரியாய் நாலே முக்கால் மணிக்கு 'ஹாட் ஹவுஸ்' அறையில் சந்திப்போம்...."

வயர்லெஸ் இரைவது நின்றது. நகுல் ஹெட்போனைக்

கழற்றி வால் ஹூக்கில் மாற்றிவிட்டு சிகரெட் பற்ற வைக்கும் முயற்சியில் இருந்த ரவியிடம் வந்தான்.

"ஜீப் வந்து கொண்டிருக்கிறது ரவி..."

"வயர்லஸ்ஸில் பேசியது யார்...?"

"ரமேஷ்தான்..."

"எதுக்காக இந்த ரகசிய அழைப்பு... ஏதாவது சொன்னாரா?"

"மனிதர் மூச்சு காட்டலை... ஜீப்ல நாம பயணம் பண்ணும் போதும் எதும் பேசக்கூடாதாம்."

"வாய்க்குப் பிளாஸ்திரி போட்டுக்கச் சொன்னாரா?"

"கிட்டத்தட்ட அது மாதிரிதான்..."

வெளியே மழை பெய்கிற இரைச்சலில் ஏதோ சத்தம் கேட்க ரவி பக்கவாட்டு ஜன்னலைத் திறந்து பார்த்தான்.

வெளியே -

பரவியிருந்த வைகறை இருட்டில் அந்த ராணுவ ஜீப்பின் விறுவிறுப்பான உடம்பு தெரிந்தது. அதன் உடம்பில் அடிக்கப்பட்டிருந்த கரும்பச்சை பெயிண்ட் இருட்டோடு மொத்தமாகக் கலந்து மாற்றியது.

"நகுல்! ஜீப் வந்தாச்சு..."

"நான் ரெடி..." ஷோல்டர் பேக் ஒன்றை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டான் நகுல்.

ரவி கையில் வைத்து இருந்த கடைசி சிகரெட்டை ஜன்னல் வழியே கண்டிதெறிந்துவிட்டு நகுலை ஏறிட்டு ஒற்றை விரலைக் காட்டினான்.

"என்ன...?"

"புரியலை..."

"அதுக்கெல்லாம் பாஸ் போர்ட்டா வேணும்...? போயிட்டு வா..."

ரவி க்வார்ட்டர்ஸின் பின்பக்கம் இருந்த டாய்லட்டை நோக்கிப் போனான். கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவன் தாழ்ப்பாளைப் போட்டு விட்டு வாஷ் பேசினுக்குப் பக்கத்தில் போய் மண்டியிட்டு உட்கார்ந்தான். அதன் அடிப்புற இணைப்புக்கு கையைக் கொண்டு போய் எதையோ திருகி வெளியே எடுத்தான்.

ஒரு பேனாவின் நீளத்துக்கு வெளிப்பட்ட அது மெலிதான பச்சை வண்ணத்தில் பளபளத்தது. அதைத் தன்



இடுப்புக்கு கொண்டு போய் பத்திரப்படுத்தினான் ரவி.

ஸிங்க்கில் தண்ணீரை ஃப்ளஷ் செய்து விட்டு வெளியே வந்தான்.

நகுல் வாசற்படியில் காத்திருந்தான்.

"என்ன ரவி... கிளம்பலாமா?"

"இதோ...!" கேன்வாஸ் பையை எடுத்து தோளில் போட்டுக்கொண்டான்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு இருவரும் வெளியே வந்தார்கள்.

குளிர் பனியோடு சேர்ந்து வெள்ளை வாசிகளாய் மாறி ஸ்லோமோஷனில் கீழே இறங்கிக் கொண்டிருந்தது.

நகுல் கையில் இருந்த சிறிய டார்ச்சை உபயோகப்படுத்த வெளிச்சவட்டம் ஜீப்பின் மேலும் ட்ரைவர் மேலும் விழுந்தது. ஜீப் நெம்பரையும் ட்ரைவர் பாட்ஜில் அடையாள அட்டையையும் சரி பார்த்துவிட்டு ஜீப்புக்குள் ஏறி உட்கார்ந்தான்.

ரவி எங்கோ பார்த்துக் கொண்டு நிற்க நகுல் அவன் தோளில் தட்டினான்.

"ரவி...! கெட்... இன்...! எங்கே பராக்கு பார்த்துட்டு நிக்கிறே...?"

ரவி ஏறி உட்கார்ந்தான். ஜீப் உடம்பை உதறிக்கொண்டு கிளம்ப நகுல் அவன் காதருகே குனிந்தான்.

"ரவி...! நீ இன்னிக்கு சரியில்லை. காலையில் கண் விழிச்சதிலிருந்தே நீ அவுட் ஆஃப் ஆர்டர். என்ன ப்ராப்ளம்? ஊர்ல இருக்கிற புதுப் பெண்டாட்டி ஞாபகம் வந்துருச்சா...?"

"அதெல்லாம்... ஒண்ணுமில்லை..."

"பின்னே... என்ன...?"

"என் மனசுக்குள்ளே ஒரு பயம்"

"என்ன பயம்...?"

"மரண பயம்..."

"ரவி..." நகுல் திகைக்க, ரவி தலை குனிந்தபடி மெல்லிய குரலில் சொன்னான்.

"நாம ரெண்டு பேரும் உயிரோடு இருக்கப் போகிற கடைசி நாள் இது...!"

"முட்டாள்...! நீ என்ன சொல்றே...?"

"உண்மையைச் சொல்றேன்..."

ஜீப் இருட்டில் தலை தெறிக்கிற வேகத்தில் போய்க் கொண்டிருந்தது.

## 2

ஈஸ்ட்மென் நிறத்தில் பெரிய பெரிய பலூன்கள் வெடித்து உள்ளே போட்டு வைத்திருந்த ஜிகினாத்தாள்கள் காற்றில் பரவி பளிச் லைட் வெளிச்சத்தில் பளபளத்தன. பீர்பாட்டில்கள் மூர்க்கமாய் குலுக்கப்பட்டு நுரையை பீய்ச்சியடித்தன. நகரின் டிஸ்கொத்தே க்ளப்புகளில் போதையோடு இருந்த ஆண்களும் பெண்களும் தாறுமாறாய் ஸ்டெப் போட்டு நடனமாடினார்கள். புது நூற்றாண்டுக்குள் மக்கள் ஆர்ப்பாட்டமில்லாமல் நுழைந்து கொண்டிருந்த அந்த நள்ளிரவில் சென்னை - பெங்களூர் ஹைவேஸ் நெடுஞ்சாலையின் அந்த வளைவுப் பகுதி போலீஸ் நடவடிக்கைகள் காரணமாய் பரபரப்பாய்த் தெரிந்தது.

ரோட்டோரமாய் பல வருஷ காலமாய் திம்மென்று நின்றிருந்த புளிய மரத்தில் அந்த மெரூன் நிற லெக்சஸ் கார் ஆவேசமாய் மோதி முத்தமிட்டுக் கொண்டிருந்தது. காரின் கண்ணாடிகள் சில்லு சில்லாய் சிதறி ரோடு முழுக்க கற்கண்டு தூளாய் பரவியிருந்தது.

போலீஸ் ஜீப் ஒன்று தனியே நின்று வயர்லெஸ் பேசிக் கொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் பக்கத்தில் நின்றிருந்த கான்ஸ்டபிளிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

"கார் யாரோடதுன்னு தெரிஞ்சதா...?"

"இல்ல... ஸார்... கார் நெம்பரை நோட் பண்ணி கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் கொடுத்திருக்கோம். வெயிட்டிங் ஃபார் இன்பர்மேஷன்..."

"காருக்குள்ளே எத்தனை பேர் இருக்காங்க?"

"ட்ரைவர் மட்டும்தான் ஸார். ஸ்பாட்லயே ஆள் அவுட்..."

"கார் ரொம்பவும் காஸ்ட்லியா இருக்கு. பெரிய புள்ளி யாருக்காவது சொந்தமாக இருக்கலாம்..."

ஜீப்பில் பொருத்தியிருந்த வயர்லெஸ் கூப்பிட்டது. ராஜேந்திரன் வேகவேகமாய் போய் தொடர்பு கொண்டார்.

"எஸ்... இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் ஹியர்"



"திஸ் இஸ் கண்ட்ரோல் ரூம் ஸார். மெட்ராஸ் - பெங்களூர் ஹைவேஸ் ரோட்டில் விபத்துக்குள்ளான லெக்சஸ் காரைப் பத்தின விபரங்கள் கிடைச்சிருக்கு ஸார்"

"சொல்லுங்க... அந்த கார் யாருக்கு சொந்தமானது....?"

"ஸார்... சமீபத்துல உலக அழகியா தேர்ந்தெடுக்கப்பட்ட சோனாவோட கார் அது..."

ராஜேந்திரனின் நெற்றிப் பரப்பில் வியப்பின் கோடுகள் உற்பத்தியாகி அப்படியே நிலைத்தன.

"போன மாசம் உலக அழகியா தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ராஸைச் சேர்ந்த சோனாவோட காரா அது...?"

"ஆமா ஸார்..."

ராஜேந்திரன் இன்னமும் திகைப்பில் இருந்தார். உலக அழகி சோனா சென்ற மாதத்தின் ஆரம்பத்தில் சிகாகோவில் நடைபெற்ற அழகிப் போட்டியில் 'மிஸ் மில்லேனியம்' பட்டம் சூடிய தமிழகத்து ஐஸ்வர்யாராய். இன்டர்நெட்டின் வெப் சைட்டுகளும், டி.வியின் சானல் திரைகளும், பத்திரிகை காகிதங்களும் இப்படி ஒரு தேவதையை இத்தனை வருஷங்களாய் பார்த்ததே இல்லை என்றும் கற்பூரம் அடித்து சத்தியம் செய்திருந்தன.

'அந்த சோனாவின் காரா இது...?'

ராஜேந்திரன் வயர்லெஸ்ஸில் கேட்டார். "சோனா வீட்டு டெலிபோன் நெம்பர் என்ன...?"

"எய்ட் ஃபைவ் டபுள் ஜீரோ நைன் செவன்"

"காண்டெக்ட் பண்ணினீங்களா?"

"அந்த போன் நெம்பரை காண்டாக்ட் பண்ணினோம். ரிங் போய்கிட்டேயிருந்தது ஸார்..."

"சோனாவோட அட்ரஸ் என்ன?"

"பெசண்ட் நகர் கோல்டன் விங்ஸ் காலனி. ஃபிப்த் க்ராஸ்ல டோர் நெம்பர் சிக்ஸ்ட்டி நைன் ஸார்..."

"டெலிபோனை யாரும் அட்டெண்ட் பண்ணலைன்னா நிச்சயமா அது அவுட் ஆஃப் ஆர்டராகத்தான் இருக்கும்...! யாராவது ஒருத்தர் நேர்ல போய் பாருங்க..."

"எஸ்... ஸார்..."

"ஆக்ஸிடெண்ட் ஆன காருக்குள்ளே சோனா இல்லை. ட்ரைவர் மட்டும்தான் இருக்கான். அவனும் ஸ்பாட் டெட். விபத்து எப்படி நடந்ததுன்னும் தெரியலை. சோனாவை எப்படியாவது காண்டாக்ட் பண்ணியாகணும்..."

"விவில்மேக் அரேன்ஜ்மெண்ட்ஸ் ஸார்."

"அரை மணி நேரத்துக்குள்ளே எனக்கு தகவல் வரணும்..."

"வரும் ஸார்..."

ராஜேந்திரன் வயர்லஸ்ஸை அணைத்துவிட்டு விபத்துக்குள்ளான காரை நோக்கிப் போனார். ரோட்டின் ஓரத்தில் இருந்த மின்கம்பத்திலிருந்து வாங்கின மின்சாரத்தை வெளிச்ச வெள்ளமாய் உமிழ்ந்து கொண்டிருந்தன காவல் துறை கொண்டு வந்திருந்த ப்ளட்லைட்டுகள். ஹைவேஸ் ரோட்டில் லாரிகளின் போக்குவரத்து தயக்கத்தோடு நிகழ்ந்து கொண்டிருந்தது.

சப் - இன்ஸ்பெக்டர் சீமா, ராஜேந்திரனை நெருங்கி வந்து கவலைப்பட்டாள். சீமா பெண் போலீஸ். விம்மிய யூனிஃபார்மோடு வளைய வரும் சீமா காக்கி டிபார்ட்மெண்டின் பெண்புலி. கிரண்பேடி மாதிரி வரவேண்டும் என்பதற்காக போலீஸில் சேர்ந்தவள்.

"என்ன சீமா... ஆக்ஸிடெண்ட் எப்படி...? ரோடுமார்க்ஸ் ஏதாவது கிடைச்சுதா...?"

"இல்ல ஸார். காரை தலை கீழ புரட்டி போட்டாச்சு. கார்க்குள்ளே வேற யாருமே இல்லை. ட்ரைவர் மட்டும் கைமா போட்ட மாதிரி சதைக்குவியலா கிடக்கிறான். கார் எப்படி ஆக்ஸிடெண்ட் ஆச்சுன்னே தெரியலை..."

"ஆட்டோமொபைல் சர்வேயர் ஸ்பாட்டுக்கு வந்தா விபத்து நடந்த விதத்தை சுலபமா கண்டுபிடிச்சு சொல்லிடுவார். அவர்க்கு தகவல் அனுப்பியாச்சா...?"

"இல்ல ஸார்..."

"மொதல்ல தகவல் கொடுங்க... விபத்து எப்படி நடந்திருக்கும்ன்னு கெஸ் பண்ண முடியலை. சோனா எங்கேன்னும் தெரியலை... ட்ரைவர் மட்டும் இந்த ஹைவேஸ் ரோட்ல காரை ட்ரைவ் பண்ணிகிட்டு எங்கே போய்கிட்டு இருந்தான்னும் தெரியலை"

ராஜேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - ரோட்டோரத்தில் அந்த அம்பாஸிடர் கார் வேகமாய் வந்து டயர்கள் தேய நின்றது. ராஜேந்திரனும் சீமாவும் திரும்பிப் பார்த்தார்கள்.

ஒரு இளைஞன் காரிலிருந்து இறங்கி முகமெல்லாம் வியர்த்து வடிய ராஜேந்திரனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.



"ஸா... ஸார்..."

பக்கத்தில் வந்து நின்று மூச்சு வாங்கியவன் - சில விநாடிகள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன் பதட்டம் தணியாத குரலில் கேட்டான். "எப்படி ஸார்... ஆக்ஸிடெண்ட்....? மேடத்துக்கு ஒண்ணும் ஆயிடலையே...?"

"மேடம்ன்னா யாரு...?"

"சோனா ஸார்..."

"நீங்க யாரு...?"

"சோனாவுக்கு செக்ரட்டரி ஸார்... ஆக்ஸிடெண்ட் எப்படி ஸார்...? மேடத்துக்கு ஒண்ணும் ஆயிடலையே...?"

ராஜேந்திரன் நிமிர்ந்தார்.

"உங்க மேடம் சோனா கார்ல இல்லையே...? ட்ரைவர் மட்டும்தான் கார்ல இருந்திருக்காரு... அந்த ஆளும் ஸ்பாட்லயே அவுட்."

இளைஞன் திகைத்தான். "ஸார்... மேடமும் கார்ல புறப்பட்டு வந்தாங்க ஸார். ஹோட்டல் கன்னிமாராவில் மேடத்துக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. விழாவை முடிச்சுகிட்டு ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி இதே கார்லதான் பெங்களூர் புறப்பட்டாங்க. எனக்கு வேற வேலை கொஞ்சம் இருந்ததால அதை பார்த்துகிட்டு நான் புறப்பட்டேன். கார் இந்த பக்கமா வந்தபோது ரோட்ல நின்னுட்டிருந்தவங்க ஆக்ஸிடெண்ட்ன்னு பேசிகிட்டதால எட்டிப்பார்த்தேன். மேடத்தோட கார்ன்னு தெரிஞ்சதும் ஆடிப் போய்ட்டேன்."

"உங்க பேர் என்ன?"

"சுதாகரன்..."

"சோனா இந்த கார்லதான் வந்தாங்கன்னு உங்களுக்கு நிச்சயமா தெரியுமா...?"

"என்ன ஸார் இது...? இந்த லெக்ஸஸ் கார் மேடத்துக்கு பரிசா கிடைச்ச கார். இதுலதான் அவங்க ஜர்னி பண்ணுவாங்க. பெங்களூர்ல நாளைக்குக் காலையில ஹோட்டல் அசோகாவில் மேடத்துக்கு ஒரு பாராட்டு விழா. அதுல கலந்துக்கத்தான் புறப்பட்டுப் போனாங்க..."

"கூட வேற யாராவது கார்ல ஏறினாங்களா?"

"இல்ல ஸார்... மேடமும் ட்ரைவரும் மட்டும்தான். வேற யாரும் கார்ல ஏறலை..."

"ட்ரைவர் பேர் என்ன...?"

"பழனியப்பன் ஸார். வெரி எக்ஸ்பீரியன்ஸ்ட் ட்ரைவர். இதுவரைக்கும் அவர் ட்ரைவ் பண்ணி கார் ஆக்ஸிடெண்ட் ஆனதே கிடையாது."

சப் இன்ஸ்பெக்டர் சிவா குறுக்கிட்டு சுதாகரனிடம் கேட்டான்.

"சோனா கிட்ட செல்போன் இருக்கா?"

"இருக்கு..."

"அவங்க செல்போனைக் காண்டாக்ட் பண்ணிப் பார்த்தா சோனா இருக்கிற இடம் தெரிஞ்சுருமே...?"

"இது எனக்குத் தோணவேயில்லையே..." என்று அவசரக்குரலில் சொன்ன சுதாகரன் தன்னுடைய பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்து சோனாவின் செல்லுக்குரிய எண்களைத் தட்டினான்.

மறுமுனை மௌனம் சாதித்தது.

சுதாகரன் மறுபடியும் எண்களை அழுத்தினான். சோனாவின் செல்போன் நிசப்தம் காத்தது.

"ரெஸ்பான்ஸ் இல்ல ஸார்... செல்போனை ஆஃப் பண்ணி வெச்ச மாதிரியும் தெரியலை..."

"ஸோ... சோனாவுக்கு ஏதோ ஆபத்து..."

"கண்டிப்பா ஸார்..."

"கடத்தப்பட்டிருக்கலாமோ...?"

"மே...பி... ஸார்"

"எதிரிகள் யார்....?"

"எப்படி ஸார்... சொல்ல முடியும்...! நம்மைச் சுத்தி இருக்கிறவங்கள்ல யார் நல்லவங்க யார் கெட்டவங்கன்னு எதை வெச்சு சொல்ல முடியும்...?" சுதாகரன் கலக்கமாய் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கான்ஸ்டபிள் ஒருவர் ராஜேந்திரனை வேகவேகமாய் நெருங்கினார்.

"ஸார்..."

"என்னவிஷயம்...?"

"காருக்குப் பக்கத்துல இது பாப்பாப்பா கிடந்தது ஸார்." கான்ஸ்டபிள் நீட்டியதை வாங்கிப் பார்த்தார் ராஜேந்திரன்.

அது ஒரு நீள் செவ்வக விஸிட்டிங் விசிட்டிங் கார்டு. அதில் தங்க மை எழுத்துக்கள்.

ராஜேந்திரன் கார்டை உயர்த்திப் பிடித்து படித்துப் பார்த்தார்.

ஜி.தத்தா. எம்.எஸ்.சி.பி.ஹெச்டி.

(ப்ரொஃபசர் ஆஃப் பயோ - கெமிக்கல் டெக்னாலஜி)



158, ரிங்ரோடு.

செக்டார் 41

கல்மாசிட்டி.

சென்னை.

இண்டர்நெட் HTCP / WWW. TATA. COM.

ராஜேந்திரன் கார்டை படித்து விட்டு சுதாகரனிடம் திரும்பினார்.

"யார் இந்த தத்தா... உங்களுக்கு தெரியுமா?"

## 3

ஜீப் காற்று மண்டலத்தை கிராய்த்தபடி இருட்டில் வேகமாய் போய்க் கொண்டிருக்க, நகுல் குழப்பமான பார்வையோடு ரவியைத் தொட்டான்.

"ரவி..." கிசுகிசுப்பாய் கூப்பிட்டான்.

"ம்..."

"இப்ப நீ சொன்னது எந்த அளவுக்கு நிஜம்ன்னு எனக்குத் தெரியாது. நாட் வெளியே போகும் உயிரோடு இருக்கப் போகிற கடைசி நாள் இதுன்னு சொன்னே... அப்படியே இருந்தாலும் அதுக்காக நாம கவலைப் படக்கூடாது. என்னை இந்த ராணுவத்தில் சேர்த்தபோதே உயிர் தேசத்துக்குன்னு எழுதப்படாத பத்திரத்துல மானசீகமாகையெழுத்து போட்டுட்டோம்."

பதிலுக்கு ரவி கிசுகிசுத்தான். "அது எனக்கும் தெரியும் நகுல்...! இருந்தாலும் மரணம் பக்கத்துல வந்துட்டிருக் கும்போது பயப்படாமே இருக்க முடியுமா...?"

"ரவி...! இன்னிக்கு உனக்கு என்னாச்சு...? இவ்வளவு வெள்ளை பேசி நான் கேட்டதே இல்லை. பார்டர் செக்யூரிட்டி சீஃப் கமாண்டோ ஆபீஸர் சகோத்தம் இன்னிக்கு உன்னையும் என்னையும் ஒரு முக்கிய பணிக்காக கூப்பிட்டிருக்கார். இது யாருக்குமே கிடைக்காத ஒரு வாய்ப்பு. இதை நினைச்சு நீ சந்தோஷப் படணும்..."

"பயமோடு சந்தோஷப்பட முடியாது."

"ரவி...! இன்னும் கொஞ்ச நேரம் உன்கிட்ட பேசிட்டிருந்தா எனக்குள்ளே இருக்கிற மனோதிடம் காணாமே போயிடும். ஆபீஸர் சகோத்தமை போய்ப்

பார்க்கிற வரைக்கும் நீ பேசாமே வா... உன்னோட குழப்பமான மனசு தெளிவடையணும்ன்னா கண்ணை மூடிகிட்டுப் ப்ரேயர் பண்ணு..."

ஜீப் அந்த மலைப்பிரதேச வளைவுகளில் வெகு ஜாக்கிரதையாய்த் திரும்பி வேகம் எடுத்து கீழே வெளிச்சப் புள்ளிகளாய்த் தெரிந்த ராணுவ பாராக்ஸை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஜீப்பின் கான்வாஸ் படுதாக்களையும் மீறிக் கொண்டு காஷ்மீர் குளிர்க்காற்று இரண்டு பேர்களின் உடம்புகளை ஊடுருவிப் பார்த்தது. மலைச்சிகரங்கள் அந்த வைகறை இருட்டிலும் பாலால் அபிஷேகம் செய்த மாதிரி பளிச்சென்று தெரிந்தது.

பதினைந்து நிமிஷ மௌனமான பயணத்துக்குப் பிறகு ராணுவ பாராக்ஸ் கட்டிடங்கள் நெருங்கின. இரண்டு கிலோ மீட்டர் தூரத்துக்கு முன்பே செக்யூரிட்டி போஸ்ட் தடுத்தது. கேட் கார்ட்மேன் ஜீப்பை சர்ச்லைட் வெளிச்சத்தில் கழுவிப் பார்த்துவிட்டு கிரீன் விளக்கை எரிய வைத்து கேட்டைத் திறந்து விட்டார்.

ஜீப் உள்ளே போயிற்று. ஒரு கிலோ மீட்டர் போனதும் இன்னொரு சின்ன செக்போஸ்ட் தடுத்தது. செக்யூரிட்டி ஆபீஸர் ஒருவர் ஜீப்புக்குள் எட்டிப் பார்த்து குரல் கொடுத்தார்.

"ப்ளீஸ்...! கெட் டவுன்..."

நகுலும் ரவியும் இறங்கினார்கள். செக்யூரிட்டி ஆபீஸர் கேட்டார் "மிஸ்டர் ரகோத்தமைப் பார்க்க வந்து இருக்கிறீர்கள். இல்லையா?"

"ஆமாம்..."

"அதோ... அந்த ஜீப்பில் போய் ஏறிக் கொள்ளுங்கள்" செக்யூரிட்டி ஆபீஸர் சொல்ல நகுலும் ரவியும் போய் ஏறிக் கொண்டார்கள். ஜீப் புறப்பட்டு வேகம் எடுத்தது.

சரியாய் ஐந்து நிமிஷ பயணம்.

மரங்கள் மண்டிய அந்த ராணுவ செல்லுக்கு முன்பாக ஜீப் போய் நின்று அவர்களை இறக்கிவிட்டதும் இருட்டில் பறந்து காணாமல் போயிற்று.

நகுலும் ரவியும் இருட்டான அந்த வராந்தாவில்



நடந்தார்கள்.

பார்டர் செக்யூரிட்டி ஆபீஸர் ரகோத்தம் அலுவலக அறையில் இருப்பதற்கு அறிகுறியாக ட்யூப்லைட் வெளிச்சம் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அறைக்கதவுக்கு முன்பாய்ப் போய் நின்றார்கள். சாத்தப்பட்டிருந்த கதவை நகுல் மெல்லத் தட்ட உள்ளேயிருந்து குரல் வந்தது. "கெட் இன்...".

கதவைத் தள்ளிக்கொண்டு இருவரும் உள்ளே நுழைந்தார்கள். பார்டர் செக்யூரிட்டி ஆபீஸர் ரகோத்தம் பெரிய மேஜைக்குப் பின்னால் தனியாய் உட்கார்ந்திருந்தார். மேஜை கண்ணாடி போர்த்துக் கொண்ட உடம்போடு பிரகாசமாய்த் தெரிந்தது. அவர்க்குப் பின்னால் இருந்த சுவர் பரப்பு முழுவதையும் அடைத்துக் கொண்டு இந்திய பாகிஸ்தான் எல்லை கோட்டைக் காட்டும் வரைபடம் ஒன்று பெரிதாய் ஒட்டப்பட்டு இருந்தது.

நகுல், ரவி இருவரும் சல்யூட் அடித்து பின் மெல்ல தாழ்ந்து குட்மார்னிங் சொன்னார்கள்.

ஐம்பது வயதின் ஆரம்பங்களில் இருந்த ரகோத்தம் தன் வழுக்கை மண்டையைத் தடவிக் கொண்டே உதடு பிரியாமல் சிரித்தார். "குட்மார்னிங் மை டியர் பாய்ஸ். பீ ஸிட்டட்"

உட்கார்ந்தார்கள்.

ரகோத்தம் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு அவர்களை ஏறிட்டார். ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்.

"உங்கள் இருவரையும் இந்த அதிகாலை நேரத்தில் இங்கே வரவழைத்ததற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்...?"

"தெரியவில்லை ஸார்..." இருவரும் ஒரு சேர தலையாட்டினார்கள்.

"ஏதாவது யூகம் செய்ய முடிகிறதா...?"

நகுல் சொன்னான். "எங்கள் இருவருக்கும் தனிப்பட்ட முறையில் முக்கியமான பணி ஏதாவது ஒதுக்கப்பட்டு உள்ளதா ஸார்...? அப்படியிருந்தால் அது எங்களுக்கு மகிழ்ச்சியான ஒன்றாக அமையும்..."

"யூ... ஆர் கரெக்ட் நகுல்...! உங்கள் இருவரிடமும்

முக்கியமான பணி ஒன்றை ஒப்படைக்கத்தான் இந்தக் அவசரமான சந்திப்பு. இது பற்றி வெளியே யாருக்கும் தெரியாது. எனக்கு மட்டுமே கிடைத்த ஒரு ரகசியத் தகவலின் அடிப்படையில் ஒரு திட்டத்தை உருவாக்கி யுள்ளேன். அந்த திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை நம்பிக்கைக்குரிய உங்களிருவரிடமும் ஒப்படைக்கப் போகிறேன்... இது கொஞ்சம் அபாயகரமான பணி. உயிரைப் பணயம் வைத்து நிறைவேற்ற வேண்டிய பணி."

நகுலும், ரவியும் ஒருத்தரையொருத்தர் திகைப்பாய் பார்த்துக்கொள்ள ரசோத்தம் தொடர்ந்தார்.

"பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற தீவிரவாதிகள் காஷ்மீர் பகுதிகளில் ஊடுருவி நம் ராணுவத்துக்கு தொல்லை கொடுத்து வருவதும் அப்பாவி பொதுமக்களை சுட்டுக் கொல்வதும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இதற்குக் காரணம் பாகிஸ்தானிலிருந்து உருவாகிவரும் புதுப்புது தீவிரவாத குழுக்கள் தான். இந்த குழுக்கள் எப்படி காஷ்மீர் பகுதிக்குள் ஊடுருவி எங்கே தங்கியுள்ளார்கள் என்பது பற்றி எனக்கு மட்டும் சில ரகசிய தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்களை அழிக்க ராணுவத்தை அனுப்பினால் அதை பாகிஸ்தான் ஒரு பிரச்னையாக்கி சர்வதேச அளவுக்கு கொண்டுபோய் பாகிஸ்தானை இந்தியா தாக்கியது என்று பொய்ப்பிரச்சாரம் செய்யக்கூடும். எனவே முள்ளை முள்ளால் எடுப்பதுபோல - திருடனுக்கு தேள் கொட்டியது போல் உங்கள் இருவரையும் வைத்து ஒரு திட்டத்தை செயல்படுத்தி அந்த தீவிரவாத கும்பலை அழிக்க வேண்டும் என்பது என் எண்ணம். அதற்கு உங்கள் இருவருடைய ஒத்துழைப்பும் எனக்கு வேண்டும். காமிராவுக்குள் ஃபிலிம் இருப்பது போல் யாருக்கும் தெரியாத ஒரு அதிரடி திட்டம் இது... இந்த அதிரடி திட்டத்தை திறமையாய் செயல்படுத்தக்கூடிய வேகமும் விவேகமும் உங்களிடம் தான் இருக்கிறது."

ரசோத்தம் சொல்லச் சொல்ல நகுலின் கண்களில் பரவசமும் மகிழ்ச்சியும் பரவியது.

"ஸார்...! பாகிஸ்தானிய தீவிரவாத கும்பலை வேரோடு



களையெடுத்தால் தான் காஷ்மீரத்து மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியும். எங்களைப் பொறுத்த வரைக்கும் இது ஒரு புனிதப்போர். திட்டம் என்ன என்பதைச் சொல்லுங்கள் ஸார். நாங்கள் அதை நிறைவேற்றி வைக்கிறோம்."

ரவி குறுக்கிட்டான் "இப்பேர்ப்பட்ட வாய்ப்பு யாருக்கும் கிடைக்காது ஸார். ஆனால் உங்கள் மூலமாக எங்களுக்கு கிடைத்து இருக்கிறது. உயிரை பணயம் வைத்து நானும் நகுலும் இந்தக் காரியத்தை செய்து முடிப்போம்."

ரசோத்தம் புன்னகைத்தார். "உங்களுடைய ஆர்வத்தைப் பத்தி எனக்குத் தெரியும். உயிரைத் துச்சமா நினைக்கவும் அதை பணயம் வைக்கவும் உங்களால மட்டுமே முடியும் என்கிற விஷயமும் எனக்குத் தெரியும்"

"சொல்லுங்கள் ஸார்...! உங்கள் திட்டம் என்ன? நாங்கள் என்ன செய்ய வேண்டும்...?"

ரசோத்தம் கையில் இருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் தேய்த்துவிட்டு எழுந்தார். மேஜைமேல் இருந்த ஒரு ஃபைபர் ஸ்டிக்கை எடுத்துக் கொண்டு சுவரில் ஒட்ட வைத்திருந்த இந்தியா - பாகிஸ்தான் வரைபடத்துக்கு அருகில் போனார். வரைபடத்தின் மேல் ஸ்டிக்கை வைத்துக் கொண்டே பேசினார்.

"காஷ்மீர் எல்லைப் பகுதியில் ஊடுருவல் தீவிரவாதத்தை வளர்த்து வரும் பாகிஸ்தான் உளவுப்படையினர் இப்போது டெல்லியையும் குறிவைக்கத் தொடங்கிவிட்டனர். டெல்லியில் தசரா திருநாள் கோலாகலமாக கொண்டாடப்படும்போது நான்கு உளவாளிகள் புகுந்து குண்டுகளை சரமாரியாக வெடிக்கச் செய்ய திட்டம் போட்டுள்ளனர். இதற்காக பதினெட்டு தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. வடகிழக்கு மாகாணத்தில் ஐ.எஸ்.ஐ. உளவுப்படை இந்தப் பயிற்சியை அளித்து வருகிறது. இது நம் உளவுப்படை மூலமாக எனக்குக் கிடைத்த ரகசியத் தகவல்."

நகுல், ரவி இருவரும் நிமிர்ந்து உட்கார்ந்து உன்னிப்பாய் கேட்டுக்கொண்டிருக்க ரசோத்தம் குரலை தாழ்த்திக் கொண்டு தொடர்ந்தார்.

''டெல்லி தாக்கப்படும் என்கிற ரகசிய தகவலை யொட்டி டெல்லி நகர் முழுவதும் போலீஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். டெல்லிக்கு வரும் பஸ் பயணிகள், ரயில் பயணிகள், சுற்றுலாப் பயணிகள் எல்லோரும் வீடியோ காமிராக்கள் மூலம் கண்காணிக்கப் படுகின்றனர். தசரா பண்டிகையின் இறுதி நிகழ்ச்சியாக டெல்லி ராம்லீலா மைதானத்தில் ராவணன் கொடும் பாவியை எரிப்பார்கள். இதை ஏராளமான மக்கள் பார்த்து மகிழ்வார்கள். அப்போது தீவிரவாதிகள் குண்டுகளை வெடிக்கச் செய்து நூற்றுக்கணக்கான மக்களை கொல்ல திட்டம் போட்டு இருக்கிறார்கள்...''

நகுல் குறுக்கிட்டு கேட்டான்.

''அமர்நாத்தில் செய்தபடுகொலை மாதிரி?''

''அதைப் போலத்தான்...! டெல்லி போலீஸார் இப்படி விழிப்போடு இருந்து கண்காணித்துக் கொண்டிருக்கும் போதே இந்திய - பாகிஸ்தான் எல்லையில் ஐ.எஸ்.ஐ. உளவுப்படை 'எல்லை காப்போம்' என்ற பெயரில் ஒரு தீவிரவாதக் குழுவை நியமித்து உள்ளது. இந்தக் குழு எல்லையில் இருக்கும் நம் ராணுவத்தை தாக்கி அதன் கவனத்தை திசை திருப்பி வேறு ஒரு பக்கமாய் தீவிரவாதிகளை காஷ்மீரில் ஊடுருவ அனுப்புவார்கள். இந்த தீவிரவாதக் குழுவுக்கு 'சிவப்பு வேங்கைகள்' என்று பெயர். இந்த சிவப்பு வேங்கைகள் ஆப்கானிஸ்தானில் பயிற்சி பெற்றவர்கள். 'எல்லை காப்போம்' என்ற பெயரில் இயங்கும் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் உள்ள மிர்பூர் மாவட்டம் 'மனா - சமினி' என்ற பள்ளத்தாக்கில் கூடுவார்கள். அங்கே அவர்களுக்கு பயங்கர ஆயுதங்கள் வழங்கப்படும்.''

ரவி கண்கள் சிவக்கக் கத்தினான். ''கேட்கும்போதே ரத்தம் கொதிக்கிறது ஸார்...''

ரகோத்தம் கையமர்த்திவிட்டு தொடர்ந்தார்.

''அந்த ஆயுதங்களை வாங்கிக் கொண்டு ஜம்மு பகுதியில் உள்ள ரஜோரி, பூஞ்ச் ஆகிய இடங்களில் தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். நவ்ஷரா பகுதியில் ஏற்கெனவே இரண்டு தடவை ராணுவ



நிலைகளை தாக்கியிருக்கிறார்கள். இதை இந்திய ராணுவம் முறியடித்து பனிரெண்டு தீவிரவாதிகளை கொன்றுவிட்டார்கள். தப்பிய தீவிரவாதிகள் பலர் இப்போது வேறு தீவிரவாத குழுக்களோடு சேர்ந்து கொண்டு மிர்ஜோன் பள்ளத்தாக்கு வழியாக வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் இன்று இரவு சந்தித்து திட்டங்களை பரிமாறிக் கொள்ளப் போகிறார்கள். இந்த வாய்ப்பைத்தான் நாம் இப்போது உபயோகப்படுத்திக் கொள்ளப் போகிறோம். அந்த மிர்ஜோன் பள்ளதாக்கு பாகிஸ்தானின் எல்லைப்பகுதியில் இருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் தீவிரவாதிகள் அந்தப் பள்ளத்தாக்குக்கு வந்து ஒரு முகாமில் தங்குவார்கள். அந்த முகாமை அழிக்க 25 கிலோ ஆர்.டி.எக்ஸ் போர்ட்டபிள் மினி மிஸைல் போதும். ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருந்து கொண்டு அந்த மினி மிஸைலை இயக்கி தீவிரவாதிகளின் முகாம் மேல் விழும்படி செய்துவிட்டால் போதும். பாகிஸ்தானின் தீவிரவாதத்துக்கு நிரந்தரமாய் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். அந்த மினி மிஸைலை இயக்கும் பணியைத்தான் உங்களிடம் ஒப்படைக்கப் போகிறேன்...''

''ஃபெண்டாஸ்டிக் ஸார்...''

''எக்ஸலண்ட்... நாங்கள் எப்போது புறப்பட்டு போக வேண்டும் ஸார்...?''

''இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்.''

''பயணம் எப்படி ஸார்?''

''உங்களுக்காக ஒரு ட்ரீ ஸீட்டட் விமானம் இந்த ராணுவ போக்கின் வட கோடி மைதானத்தில் காத்துக் கொண்டிருக்கிறது. உள்ளே போர்ட்டபிள் மினி மிஸைல் வைக்கப்பட்டுள்ளது. அதைச் செலுத்துவதற்கான ஜெனரேட்டர் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து விமானத்தில் இரண்டரை மணி நேர பயணம். மிர்ஜோன் பள்ளத்தாக்குக்குப் பக்கத்தில் உள்ள ரோஹித் காட்டுப் பகுதிக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். ரோஹித் காட்டுப்பகுதி நம் இந்திய எல்லையைச் சேர்ந்தது. அதனால் விமானம் லேண்ட் செய்வதில் உங்களுக்கு எந்த

பிரச்சனையும் இருக்காது. விமானத்தை லேண்ட் செய்து நிலை தரையானால் கேமோப்ளாஜ் செய்துவிட்டு போட்ட பின் மிஷைலையும் ஜெனரேட்டரையும் எடுத்துக் கொண்டு நீங்கள் இருவரும் நடக்க ஆரம்பித்துவிட வேண்டும். ரோஹித் ஃபாரஸ்ட்டிலிருந்து பாகிஸ்தான் எல்லையில் உள்ள மிர்ஜோன் பள்ளத்தாக்கு 32 கிலோ மீட்டர் தூரம். இந்த தூரத்தை நீங்கள் இருவரும் பதினாறு மணி நேரத்தில் கடந்து மிர்ஜோன் பள்ளத்தாக்கை நெருங்க வேண்டும். இப்போது இந்த வரைபடத்தை உன்னிப்பாய்ப் பாருங்கள். இது இப்போது நாம் இருக்கும் காசிம்பாத் ராணுவ பேஸ். இங்கிருந்து இரண்டரை மணி நேர விமான பயணத்தில் நீங்கள் போய்ச் சேர வேண்டிய ரோஹித் ஃபாரஸ்ட் இருக்கிறது. இங்கிருந்து தென்கிழக்கு திசையில் நேராய் 32 கிலோ மீட்டர் தூரம் போனால்..."

நகுல் குறுக்கிட்டான்.

"ஸார்... ஒரு சந்தேகம்..."

"என்ன...?"

"மிர்ஜோன் பள்ளத்தாக்கில் பாகிஸ்தானின் பயிற்சி பெற்ற தீவிரவாதிகள் மொத்தம் எத்தனை பேர் கூடப் போவதாக சொன்னீர்கள்...?"

"இரண்டாயிரம் பேர்..."

"இது உறுதியான செய்திதானா...?"

"உறுதியான செய்திதான்..."

"இது உங்களுக்குக் கிடைத்த ரகசியத் தகவல் என்றும், வெளியே யார்க்கும் தெரியாது என்றும் சொன்னீர்கள்?"

"ஆமாம்..."

"இப்போது இந்த விஷயம் நம் மூன்று பேர்க்கு மட்டும்தான் தெரியும் இல்லையா...?"

"ஆமாம்..."

நகுல் விருட்டென்று தன் இடுப்புப் பகுதிக்கு கையைக் கொண்டு போய்-

அந்த துப்பாக்கியை வெளியே எடுத்தான்.

"ஜெய் பாகிஸ்தான்!" என்று சொல்லி ரவியையும் ரகோத்தமையும் மாறி மாறி குறி பார்த்தான்.

ரகோத்தம் கத்தினார்.



"நகுல்...! வாட் ஈஸ் திஸ்...? இது என்ன பைத்தியக்காரத்தனம்?"

அவன் சிரித்தான்.

"இது பைத்தியக்காரத்தனம் இல்லை ஸார். வடிகட்டின புத்திசாலித்தனம். நான் பிறப்பால் ஒரு பாகிஸ்தானி. உங்கள் ராணுவத்தில் சேர்வதற்காகவே நகுலாய் மாறினேன். மிர்ஜோன் பள்ளத்தாக்கில் கூடப் போகும் என் இரண்டாயிரம் சகோதரர்களை நான் காப்பாற்ற வேண்டியது அவசியம். நம் மூன்று பேர்களுக்கு மட்டுமே தெரிந்த இந்த மிர்ஜோன் பள்ளத்தாக்கு ரகசியம் இனி எனக்கு மட்டுமே தெரியும். என்ன பார்க்கிறீர்கள்? நீங்கள் இரண்டு பேருமே உயிரோடு இருக்கப் போவதில்லை...! போத் ஆஃப் யூ ரைப்ஸ் யுவர் ஹெவன்ஸ்..."

ரகோத்தமும் ரவியும் கைகளை உயர்த்திக் கொண்டு பின் வாங்கினார்கள். சுவர்க்கு முட்டிக் கொண்டு நின்றார்கள்.

"ஜெய் பாகிஸ்தான்...!" சொல்லி ரகோத்தமின் மார்பைக் குறி பார்த்தான் நகுல்.

## 4

சென்னையின் விலாப்புறத்தில் அந்த காலனி சிட்டி புதிதாய் முளைத்திருக்க செக்டார் 41-ல் போலீஸ் ஜீப் நுழைந்தது. புதிதாய் போடப்பட்டிருந்த ரோடுகளின் ஓரங்களில் சோடியம் ஆவி விளக்குகள் வரிசையாய் பூத்திருந்தன. பின்சீட்டில் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரனும் சப்-இன்ஸ்பெக்டர் சிவாவும் உட்கார்ந்திருக்க டிரைவர் கேட்டார்.

"டோர் நெம்பர் என்ன?"

"158..."

ஜீப்பை மெதுவாக விரட்டி பங்களாக்களின் நெம்பர் பார்த்து பின் காரனின் வளைவில் மரங்களுக்குப் பின்னால் ஒளிந்தபடி தெரிந்த பங்களாவுக்கு முன்பாய் கொண்டு போய் நிறுத்தினார் டிரைவர்.

வாட்ச்மேன் சத்தம் கேட்டு கேட்டின் விக்கெட்

கதவைத்திறந்து கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான். போலீஸ் ஜீப் என்று தெரிந்ததும் பதற்றமாய் பக்கத்தில் வந்தான். பவ்யமாய் குனிந்தவனிடம் ராஜேந்திரன் கேட்டார்.

''தத்தா இருக்காரா...?''

''இருக்காங்க... ஆனா... இந்த நேரத்துல...''

''ஒரு முக்கியமான விஷயமா அவர்கிட்ட கொஞ்சம் பேசவேண்டியிருக்கு.''

''ஒரே ஒரு நிமிஷம் ஸார்'' சொன்ன வாட்ச்மேன் தன் இடுப்பில் சொருகி வைத்திருந்த வாக்கி டாக்கியை எடுத்து யாருடனோ பேசினான். பிறகு காம்பௌண்ட் கேட்டை அகலமாய் திறந்து வைத்துவிட்டு ராஜேந்திரனிடம் சொன்னான்.

''ஸார்! உள்ளே போங்க. போர்டிகோவுக்குப் பக்கத்துல ஒரு ரிசப்ஷன் ரூம் இருக்கும். அங்கே பூர்வான்னு ஒரு பொண்ணு உங்களை ரிஸீவ் பண்ணிக்குவாங்க...''

''யார் அந்த பூர்வா...?''

''அய்யாவோட பர்சனல் செகரட்ரி...! அய்யா சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் அந்த பொண்ணுதான் பார்த்துக்கும்.''

ஜீப் உள்ளே போயிற்று. அந்த பழைய பங்களா ஒரு சின்ன அரண்மனை மாதிரி தோற்றம் காட்டியது. பராமரிக்கப்பட்ட தோட்டம். லான். லானின் நடுவே ஒரு பெண் சிலை தோளில் குடம் சுமந்து நின்றிருந்தது.

போர்டிகோவில் போய் ஜீப் மௌனமாக - ராஜேந்திரனும் சீமாவும் இறங்கி போர்டிகோ படிகளில் உயர்ந்தார்கள்.

சுடிதார் அணிந்த அந்த இளம்பெண் எதிர்ப்பட்டாள். அழகாக இருந்தவளின் முகத்தில் களைப்பு கொஞ்சமும் இல்லை.

''அயாம் பூர்வா... பி.ஏ.டு மிஸ்டர் தத்தா''

ராஜேந்திரன் தன்னையும் சீமாவையும் அறிமுகப் படுத்திக் கொண்டார்.

''ப்ளீஸ் கம் இன்...'' பக்கத்தில் இருந்த ஒரு அறைக்கு பூர்வா கூட்டிப்போய் உட்கார வைத்தாள். அறையில் இரண்டு கம்ப்யூட்டர்களும் ஒரு ஃபேக்ஸ் மெஷினும், ஒரு



டெலக்ஸ் பிரிண்டரும் உயிரோடு இருந்தன. டெட்ஸூல் மானிட்டர் ஒன்று கட்டளைகளுக்காக காத்துக் கொண்டிருந்தது.

பூர்வா ராஜேந்திரனை ஏறிட்டபடி கேட்டாள்.

''சொல்லுங்க என்ன விஷயம்...?''

''உலக அழகி சோனா பயணம் பண்ணின கார் மர்மமான முறையில் விபத்துக்குள்ளாகியிருக்கு. ஸ்பாட்லயே ட்ரைவர் மரணம். சோனா கார்ல இல்லை...''

''சரி...! இந்த சம்பவத்துக்கும் புரொஃபசர் தத்தாவை நீங்க பார்க்க வந்ததுக்கும் என்ன சம்பந்தம்?''

''விபத்து நடந்த இடத்துல புரொஃபசரோட விசிட்டிங் கார்டு கிடந்தது. இந்தக் கார்டு அவரோடதுதானே...?''

ராஜேந்திரன் கார்டை எடுத்துக் காட்ட, பூர்வா பார்த்துவிட்டு தலையசைத்தாள்.

''எஸ்... இது அவரோட கார்டுதான்...''

''சோனாவுக்கும் தத்தாவுக்கும் என்ன தொடர்பு?''

''ஒரு தொடர்பும் கிடையாது.''

''பின்னே எப்படி இந்த விசிட்டிங் கார்டு ஆக்ஸிடென்ட் ஸ்பாட்ல கிடந்தது...?''

''தெரியலை...''

''தத்தாவை நாங்க பார்க்கணும். அவரை வரச் சொல்லுங்க...''

''ஸாரி...''

''எதுக்கு ஸாரி...?''

''பகல் நேரத்தில் அவர்க்கு நிறைய தொந்தரவுகள். ஸோ... ராத்திரி நேரத்துலதான் தன்னோட ஆராய்ச்சிகளை பண்றார். நீங்க நாளைக்குக் காலையில் வாங்க... நான் அவர்கிட்ட சொல்லி வெக்கறேன்''

''ஸாரி... மிஸ் பூர்வா...! இது ஒரு சீரியஸான விவகாரம். கார் மர்மமான முறையில் விபத்துக்குள்ளாகியிருக்கு. சோனாவை ஸ்பாட்ல காணோம். இன்வெஸ்டிகேஷனைத் தொடங்கி உடனடியா சோனா எங்கேன்னு கண்டுபிடிக்கணும். அவரோட ஆராய்ச்சி அவர்க்கு முக்கியமானதாக இருக்கலாம். பட் எங்களுக்கு அதைவிட முக்கியம் என்கொயரி. ப்ளீஸ் கோ-ஆப்பரேட் வித் மீ...''

பூர்வா சில விநாடிகள் யோசிக்க எடுத்துக் கொண்டு பின் மெல்ல தலையை ஆட்டினாள்.

"இட்ஸ் ஓ.. கே... மிஸ்டர் இன்ஸ்பெக்டர்...! வாங்க லேபுக்கே போலாம்..."

"தேங்க்யூ வெரிமச்..."

பூர்வா இரண்டு பேர்களையும் அழைத்துக்கொண்டு பங்களாவுக்குள்ளே போனாள்.

நிசப்தமான பங்களா. நிறைய அறைகள். எல்லா அறைகளின் கதவுகளும் இறுக சாத்திக் கிடந்தன. இரண்டு நிமிஷ நேர நடைக்குப்பின் பங்களாவின் பின்பக்கம் சற்றே வெளிச்சத்தோடு பார்வைக்கு கிடைத்தது.

"இதுதான் புரஃபசர் தத்தாவோட லேபரட்ரி"

சொல்லிக்கொண்டே ஒரு கனமான கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு பூர்வா உள்ளே போனாள். லேபின் எல்லாப் பக்கங்களும் ஃபைபர் கண்ணாடியால் தடுக்கப்பட்ட அறைகள். உள்ளே கண்ணாடிக் குடுவைகள் நிறம் நிறமாய்த் தெரிந்தன. இன்னொரு பக்கம் நவீன டெலஸ்கோப்புகள். எல்லா அறைகளையும் இணைக்கும் சிக்கலான ஒயர் அமைப்புகள். உதிடல் கருவிகள்.

பூர்வா ராஜேந்திரனையும் சீமாவையும் அங்கேயிருந்த நாற்காலிகளில் உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

ஒரு வொர்க்கிங் டேபிளின் முன்னால் முதுகைக் காட்டிக்கொண்டு கண்ணாடி கேஸ் ஒன்றை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அந்த கண்ணாடி கேஸுக்குள் ஹைட்ராலிக் ப்ரஸ் போன்ற சிறிய இயந்திரம். இயந்திரத்தின் சதுரப் பலகையில் பளீரென்ற வெள்ளையில் ஒரு எலி தன் சிவப்பு நிறக் கண்களால் மிரள மிரள விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தது.

பூர்வா உள்ளே நுழைந்த விநாடி - தத்தா ஒரு பொத்தானை அழுத்த ஹைட்ராலிக் ப்ரஸின் உலோக கக்கை ஆக்ரோஷமான வேகத்தில் கீழே இறங்கி இயந்திரப்



படுக்கையில் மிரட்சியாய் விழித்துக் கொண்டிருந்த வெள்ளெலியை நடாலென்று நசுக்க, எலி ரத்தமும் சதையுமாய் சின்னச் சின்ன துணுக்குகளாய் சிதறி ஒவ்வொரு துணுக்கும் சிறிது நேரம் துடித்தது.

பூர்வா மெல்ல குரல் கொடுத்தாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ டாட்..."

தத்தா திரும்பினார். நரைத்த தலையும் பவர்ஃபுல் லென்ஸ் கண்ணாடியும் அவரை கலவையாய் ஒரு புரஃபசரின் அந்தஸ்துக்கு கொண்டு போய் நிறுத்தின.

"என்ன பூர்வா...?"

"உங்களைப் பார்க்க போலீஸ் வந்திருக்காங்க..."

தத்தாவின் கண்களில் சின்னதாய் வியப்பு.

"போலீஸ்...?"

"எஸ்... டாட்..."

"விஷயம் என்னான்னு கேட்டியா?"

"கேட்டேன் டாட். உலக அழகி சோனாவோட கார் மர்மமான முறையில் விபத்துக்குள்ளாகிவிட்டதாகவும் காரில் இருந்த சோனா காணாமல் போய்விட்டதாகவும் அதே சமயம் கார் ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டில் உங்களுடைய விசிட்டிங்கார்டு கிடந்ததாகவும் போலீஸ் சொல்கிறார்கள்."

"போலீஸை உள்ளே கூப்பிடு..."

பூர்வா போய் கூட்டி வந்தாள். தத்தா ராஜேந்திரனை ஏறிட்டார்.

"ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்லதான் என்னோட விசிட்டிங்கார்டு உங்களுக்கு கிடைச்சதா...?"

"எஸ்...! பாருங்க. இது உங்க கார்டுதானே?"

தத்தா பார்த்துவிட்டு தலையசைத்தார். "ஆமா. இது என்னோட கார்டுதான். இப்ப உங்களுக்கு என்ன வேணும்?"

"உண்மை வேணும்..."

"என்ன உண்மை...?"

"உங்களுக்கும் சோனாவுக்கும் என்ன தொடர்பு?"

"ஒரு தொடர்பும் கிடையாது. அந்த சோனாவை டி.வி.யிலும் பேப்பரிலும் பார்த்ததோடு சரி..."

"பின்னே எப்படி உங்க கார்டு ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டுக்கு போச்சு...?"

"இன்ஸ்பெக்டர்வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்...? நான் தினசரி பகல் நேரங்கள்ல பல பேரை பார்த்துப் பேசறேன். சில பேர் என்னோட விசிட்டிங் கார்ட்ஸ் கேட்பாங்க. தர்றேன். என்கிட்ட இருந்து விசிட்டிங் கார்டு வாங்கிட்டுப் போனவங்கள்ல யாரோ ஒருத்தர் அந்த சோனாவுக்கு வேண்டப்பட்டவராக இருக்கலாம். சோனாகிட்ட அந்த விசிட்டிங் கார்டை கொடுத்திருக்கலாம். அதுக்குப் பிறகு காரிலேயே விட்டுட்டும் போயிருக்கலாம். விபத்து நடந்த இடத்தில் என்னோட விசிட்டிங் கார்டு இருந்ததுங்கிற ஒரே ஒரு காரணத்துக்காக எனக்கும் சோனாவுக்கும் தொடர்பு இருக்குமுன்னு நீங்க நினைக்கிறது சரியில்லை. இதுக்காக மெனக்கெட்டு இந்த ராத்திரி வந்து எனக்கு தொல்லை கொடுக்கிறதும் சரியில்லை."

"ஸாரி மிஸ்டர் தத்தா... சோனாவோட கார் விபத்துக்குள்ளாகியிருக்கிறதும், சோனா காணாமே போயிருக்கிறதும் சாதாரணவிஷயம் கிடையாது. நாளைக்குகாலையில் இந்த நியூஸ் இந்தியா முழுக்க ஒரு பிரளயத்தையே உண்டாக்கும். விடியறதுக்குள்ளே சோனா கண்டுபிடிக்கப் பட்டுட்டா பிரச்னையோட வீரியத்தை ஓரளவுக்கு குறைச்சுடலாம்..."

"யூ மே பி கரெக்ட் இன்ஸ்பெக்டர்...! பட் இந்தப் பிரச்னைக்கு நான் எந்த வகையிலும் உங்களுக்கு உதவ முடியாதே... ஐயாம் ஹெல்ப்லெஸ்... என்னோட விசிட்டிங் கார்டை நீங்க ஒரு முக்கியமான தடயமா எடுத்துக்க வேண்டாம். கேஸை வேற கோணத்துல ஹேண்டில் பண்ணுங்க... ஏதாவது பலன் கிடைக்கலாம்."

"போலீஸைப் பொறுத்த வரைக்கும் ஸ்பாட்ல கிடைச்ச உங்க விசிட்டிங் கார்டு ஒரு முக்கியமான தடயம் மிஸ்டர் தத்தா! சில கேஸ்கள்ல சில தடயங்கள் அப்பாவி மாதிரி தோணும். அதை அலட்சியப்படுத்தினா சில உண்மைகள் வெளியே வராமலே போயிடும். எங்க விசாரணைக்கு நீங்க ஒத்துழைப்பு கொடுத்து நாங்க கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொன்னால்



பரவாயில்லை..."

தத்தா தன் தோள்களைக் குலுக்கினார்.

"போலீஸ் விசாரணைக்கு ஒத்துழைக்க நான் தயார். உங்க கேள்விகள் என்ன...?"

"நீங்க எது சம்பந்தமான ஆராய்ச்சி பண்ணிட்டிருக்கீங்க...?"

"பாடி ரீ-கேப்சரிங்" (BODY RE - CAPTURING)

"அப்படீன்னா..."

"இந்த வெள்ளெலியைப் பார்த்தீங்களா...?" ஹைட்ராலிக் பிரஸ்ஸில் வெட்டுப்பட்டு ரத்தம் தோய்ந்த சதைத் துணுக்குகளாய் சிதறிப் போயிருந்த பலகையைக் காட்டினார்.

ராஜேந்திரனும் சீமாவும் திகைப்பான பார்வையோடு வெள்ளெலியின் சதைத் துணுக்குகளை பார்த்துக் கொண்டிருக்கும்போதே தத்தா தொடர்ந்தார். "இது ஸ்பெஷலாய் வடிவமைக்கப்பட்ட ஹைட்ராலிக் ப்ரஸ். இந்த ப்ரஸ்ஸால் வெட்டப்பட்ட வெள்ளை எலி சதைத் துணுக்குகளாக தாறுமாறாய் சிதறியிருக்கிற மாதிரி தோணும். ஆனால் அது அப்படி சிதைந்து போகலை. அந்த வெள்ளை எலியின் மூளை அதாவது தலைபாகம் அப்புறம் இருதயம் இந்த இரண்டைத்தவிர எலியின் மற்ற உறுப்புகள் சேதமாகியிருக்கும். அடுத்த பனிரெண்டு மணி நேரத்திற்குள் அந்த எலியின் உடம்பை பழையபடி ஒட்ட வைத்து உயிரூட்டி ஓட வைக்கிறதுதான் இந்த ஆராய்ச்சியோட நோக்கம்."

ராஜேந்திரனும் சீமாவும் தத்தாவை ஒரு நம்பாத பார்வை பார்த்தார்கள்.

"இது சாத்தியமா...?"

"எதையுமே சாத்தியம்ன்னு நினைச்சா சாத்தியம்தான். என்னோட ஆராய்ச்சி மெல்ல மெல்ல வெற்றியை நோக்கி போய்கிட்டு இருக்கு."

"சரி... இந்த ஆராய்ச்சியால் என்ன பயன்?"

தத்தா புன்னகைத்தார். "போர் நடக்கும்போதும் விபத்து நடக்கும்போதும் மனித உடல்கள் உருக்குலைந்து போறதை நாம் பார்த்து இருக்கிறோம். ஒரு மனிதனின்

மூளையும் இருதயமும் நல்ல நிலையில் இருந்தால் அவருடைய உடம்பின் மற்ற பகுதிகள் எப்படி சிதைந்து போயிருந்தாலும் இந்த ஆராய்ச்சியை 'பாடி ரீகேப்சரிங்' மெதட் மூலமாக அந்த மனிதனை உயிர்பிழைக்க வைக்கமுடியும். இது நம் நாட்டு ராணுவத்துக்காக மேற்கொண்ட ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சிக்காக இந்திய அரசு எனக்கு பத்துகோடி ரூபாயை நிதியாக வழங்கியிருக்கிறது."

"உங்கள் ஆராய்ச்சியில் நீங்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைத்திருக்கிறதா...?"

"ஓரளவு..."

"முழுமையான வெற்றி கிடைக்கும் என்று நம்புகிறீர்களா?"

"நிச்சயமாக வெற்றி கிடைக்கும். ஏனென்றால் மனித உடம்பு ஒரு அற்புதமான விஷயம். உடம்பில் ஏற்படும் கைகால் முறிவு, வெட்டுக்காயங்கள் இதெல்லாம் நாள் செல்ல செல்ல செல்கள் வளர்ச்சியடைவதின் மூலமாக தானாகவே குணமாகிவிடும். காயம்பட்ட வடு கூட சில சமயங்களில் இருக்காது. இது இயற்கை செய்யும் அற்புதம். இயற்கை நிறைய நாட்களை எடுத்துக்கொண்டு நிதானமாக செய்வதை நான் வேகப்படுத்தப்போகிறேன். அதாவது இயற்கையின் இந்த வளர்சிதை மாற்றத்தை என் செயற்கையான செல், மாலிக்யூல் கட்டமைப்பு முறைகளின் மூலமாக வேகப்படுத்துவதுதான் என் ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றால் மனித மரணங்களை தள்ளிப்போட முடியும். எல்லையில் போர் புரியும் நம் ராணுவவீரர்களுக்கு உறுப்புகளில் சேதம் ஏற்பட்டாலும் திடமான உடல் வலிமையை கொடுக்க முடியும்... எப்படியும் இந்த வருட முடிவுக்குள் என் ஆராய்ச்சி வெற்றியின் உச்சியைத் தொட்டுவிடும்."

"மிஸ்டர் தத்தா...! உங்கள் ஆராய்ச்சி வெற்றியடைய எங்கள் வாழ்த்துக்கள்... இப்போது மறுபடியும் சோனாவின் விஷயத்துக்கு வருவோம்... சோனாவை உங்களுக்கு உண்மையிலேயே தெரியாது...?"

"தெரியாது...! தெரிந்தால் தெரியும் என்று சொல்லி விட்டு போகிறேன். இதில் ஒளிவு மறைவு என்ன வேண்டிக்கிடக்கிறது...?"

"இந்த ஒரு வார காலத்தில் நீங்கள் யார் யாரையெல்லாம் சந்தித்தீர்கள், எத்தனை பேர்க்கு விசிட்டிங் கார்டுகள் கொடுத்தீர்கள் என்று சொல்ல முடியுமா...?"

தத்தா யோசிக்க பூர்வமாக சொன்னார்.

"இந்த வாரத்தில் விசிட்டர்ஸ் அதிகமா வரலை. நேத்து ரெண்டு இளைஞர்கள் வந்தாங்க. புரபசரை கண்டிப்பா பார்த்தேயாகணும்ன்னு அடம்பிடிச்சாங்க."

தத்தா ஆமோதித்தார்.

"எஸ்... எஸ்...! அந்த ரெண்டு பேர்கள் என்னை சந்திச்சாங்க. வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த கல்லூரிமாணவர்கள். பயோடெக்னாலஜி ஸ்டூடண்ட்ஸ். என்கிட்ட பாடி ரீகேப்சரிங் பற்றி ரொம்ப நேரம் பேசிட்டு போனாங்க. நிறைய சந்தேகங்கள் கேட்டாங்க. போகும் போது விசிட்டிங் கார்டு கேட்டாங்க. கொடுத்தேன்."

ராஜேந்திரன் நெற்றியைக் கீறினார். "அவங்க பேர் என்ன... அட்ரஸ் தெரியுமா...?"

"ஏதோ பேர் சொன்னாங்க... இப்ப ஞாபகம் இல்லை. மறந்துட்டேன். ஆனா..."

"சொல்லுங்க..."

"ஹோட்டல் ஏர்லைன்ல 'ஹால்ட்' பண்ணியிருக்கிறதாக சொன்னாங்க..."

## 5

"ஜெய் பாகிஸ்தான்" என்று சொல்லி துப்பாக்கியை உயர்த்திய நகுலைப் பார்த்து ரகோத்தமும் ரவியும் மரண பயத்தோடு நிற்க நகுல் சிரித்தான்.

"எங்கள் பாகிஸ்தானை ஜெயிக்க உங்களால் முடியாது. யுத்தபூமியில் ஒரு பாகிஸ்தானி செத்தா பத்து பாகிஸ்தானி பிறப்பான்."

ரகோத்தம் குரல் நடுங்க எச்சரித்தார்.

"எங்க ரெண்டு பேரையும் சுட்டுட்டு நீ தப்பிச்சு போக முடியாது. வெளியே இருக்கிற செக்யூரிட்டி உன்னை உயிரோடு விடமாட்டாங்க."





நகுல் பலமாய் சிரித்தான் "என்னை சுட்டு கொல்கிற வேலை அவங்களுக்கு வேண்டாம். உங்க ரெண்டு பேரையும் சுட்டு கொன்ன பின்னாடி என்னால தப்பிக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். இதுல மொத்தம் ஆறு தோட்டா இருக்கு. உங்களுக்கு ரெண்டு ரவிக்கு ரெண்டு எனக்கு ரெண்டு. நம்ம மூணு பேர்க்கு மட்டுமே தெரிஞ்ச இந்த மிஷ்ஷன் பண்ணதுக்கு திட்டம் இதே அறையில் சமாதியாயிடணும். எங்களுக்கு வேண்டியது காஷ்மீர். அது கிடைக்கும் வரை இப்படிப்பட்ட உயிர்த் தியாகங்கள் நடந்துகிட்டுதான் இருக்கும்."

நகுல் சொல்லிக் கொண்டே பிஸ்டலை சரியாய் உயர்த்தி ரகோத்தமனைப் பார்த்தான்.

"சார்! முதலில் நீங்கள், பிறகு ரவி, கடைசியில் நான். மூன்று பேருமே சாகப்போகிறோம். பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். அடுத்த ஜென்மத்திலாவது நாம் மூன்று பேரும் பாகிஸ்தானில் ஏதாவது ஒரு தம்பதியர்க்கு மூன்று சகோதரர்களாகப் பிறப்போம் என்று."

பிஸ்டலின் ட்ரிக்கரில் நகுலின் கட்டை விரல் பதிந்து இறுகியது.

"கிளிக்..."

துப்பாக்கியிலிருந்து தோட்டாவுக்கு பதிலாக வெறும் காற்றுதான் வெளியே வந்தது.

நகுல் லேசாய் பதற்றப்பட்டு மறுபடியும் ட்ரிக்கரை அழுத்த - மறுபடியும் காற்று.

நகுல் வியர்த்து வழிந்து கொண்டு துப்பாக்கியின் வயிற்றைத் திறந்து உள்ளே பார்த்தான். புல்லட் சேம்பரில் ஆறு தோட்டாக்களும் நெருக்கியடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தன. நகுல் மறுபடியும் பிஸ்டலைப் பொருத்தி ரகோத்தமனைச் சுட ரவி சிரித்தான்.

"ஸாரி... நகுல்! இன்னிக்கு பூராவும் நீ முயற்சி பண்ணினாலும் அந்தத் துப்பாக்கியை வெடிக்க வைக்க முடியாது. உன்னோட துப்பாக்கி மட்டும் இல்லை. இந்த அறையில் வேற எந்தத் துப்பாக்கியையும் உபயோகப்படுத்தினாலும் தோட்டா வெளியே வராது. காத்துதான் வெளியே வரும். உன்னோட துப்பாக்கி ஊமையாகிப் போனதுக்கு என்ன காரணம் தெரியுமா?"

சொன்ன ரவி தன் இடுப்புப் பகுதிக்குக் கையைக் கொண்டு போய் பேனா நீளத்துக்கு பளபளத்த அந்தப் பச்சை நிற கருவியை எடுத்தான். சிரித்தான்.

"இந்தக் கருவியைப்பத்தி உனக்கு தெரிஞ்சிருக்க நியாயம் இல்லை. இது பிஸ்டல் ஆக்டிவேட்டர். செல்லமா இதைப் பிஏபி (PAP) என்று கூப்பிடறதும் உண்டு. இது இருக்கிற இடத்துல எந்த பிஸ்டலும் வேலை செய்யாது. உங்க பாகிஸ்தான்ல இதையெல்லாம் உனக்கு சொல்லித்தரலை போலிருக்கு..."

நகுலின் முகம் வெளிறிப் போயிருக்க சுகோத்தம் புன்னகைத்தார். "உன்னை இப்படி கையும் களவுமாக பிடிக்க நாங்க போட்ட திட்டம் இது. இந்தியாவில் குழப்பம் விளைவிக்க வேண்டும் என்றும் சட்டம் ஒழுங்கை குலைக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் உளவுத் துறை [illegible] செயல்பட்டு வருவது எங்களுக்குத் தெரியும். இந்த சதிகாரர்களிடம் இந்தியர்கள் விலை போவது கொடுமையென்றால் இந்தியாவை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள இந்திய ராணுவ வீரர்களே விலை போவது கொடுமையிலும் கொடுமை. ஐ.எஸ்.ஐ. உளவாளிகளின் தீவிரவாத பயிற்சி முகாமில் இந்தியாவைச் சேர்ந்த சிலர் பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பது எங்களுக்குத் தெரியும். இந்திய ராணுவத்தில் [illegible] பார்த்துக் கொண்டே பாகிஸ்தானுக்கு 'ஜே' [illegible]க் கொண்டிருக்கும் உன்னை மாதிரியானவர்களைப் [illegible] கண்டுபிடிக்கப் போகிறோம்."

சுகோத்தம் பேசிக் கொண்டே வயர்லஸ் போனை ஆன் செய்து உரையாடினார்.

"செண்ட்ரல் கமாண்ட்...?"

"எஸ்..." மறுமுனை கரகரத்தது.

"கறுப்பு ஆடு மாட்டிக் கொண்டது. கைது பண்ணவேண்டும். செக்யூரிட்டி ஸ்க்வாடிலிருந்து ஐந்து பேர்களை உடனடியாய் அனுப்பி வையுங்கள்."

வயர்லஸ்ஸை அணைத்த சுகோத்தம் நகுலை ஏறிட்டார்.

"நகுல்! நீ இப்போது போகவேண்டிய இடம் சிறைச்சாலை. அடுத்த வாரம் நீ போக வேண்டிய இடம் ராணுவ கோர்ட். அதற்கு அடுத்தபடியாக நீ போக



வேண்டிய இடம்...?" சொன்ன சுகோத்தம் மேலே கையைக் காட்டினார். "தேசவிரோத குற்றத்துக்கு ராணுவ கோர்ட் என்ன தண்டனை விதிக்கும் என்று உனக்கே தெரியும். இந்த இந்திய மண்ணுக்கு துரோகம் செய்த நீ இந்த இந்திய மண்ணுக்கே உரமாகிப் போவதுதான் உன் பாவம் தீர்வதற்கான வழி."

அதுவரைக்கும் மௌனம் சாதித்த நகுல் இப்போது வாயைத் திறந்தான்.

"மிஸ்டர் சுகோத்தம்...! என்னை பொறி வைத்து பிடித்ததற்காக ரொம்பவும் சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டாம். நீங்கள் என்னை எந்த சிறையில் போட்டாலும் சரி இன்றும் இரண்டு வார காலத்தில் நான் தப்பித்து பாகிஸ்தான் போய்விடுவேன்..."

"கனவு..." சுகோத்தம் சிரித்தார்.

"நடக்கப் போகிற நிஜம். உங்களோட உதவாக்கரை ராணுவ கோர்ட் எனக்கு தண்டனை கொடுப்பதற்கு முன்பு நான் பாகிஸ்தானில் இருப்பேன்..."

வெளியே பூட்ஸ் சத்தங்கள் கேட்டன. 'செண்ட்ரல் கமாண்ட்' பிரிவைச் சேர்ந்த செக்யூரிட்டி ஸ்க்வாட் உள்ளே வந்தது. நகுலைச் சுற்றி தளவட்டம் போட்டுக் கொண்டு நின்றது. நகுலின் கைகளுக்கு விலங்கு ஏறி நகர்த்தப் பட்டான். விலங்கோடு இரண்டு கைகளையும் உயர்த்தி கோஷம் போட்டான் நகுல்.

"ஜெய்... பாகிஸ்தான்..."

"போ... போ... தனிமைச் சிறையில் உட்கார்ந்து கொண்டு உன் இஷ்டம் போல கத்து."

செக்யூரிட்டிகள் நகுலைத் தள்ளிக்கொண்டு போனதும் சுகோத்தம் ரவியை ஏறிட்டார்.

"ரவி...! நம் திட்டத்தின் முதல் கட்டம் வெற்றி. இனி இரண்டாவது கட்டத்துக்கு நீ தயாராக வேண்டும். மிர்ஜோன் பள்ளத்தாக்கில் கூடியுள்ள பாக். தீவிரவாதிகளை ஒழிக்க நீ பயணப்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது."

"என்னோடு வரப்போவது யார் யார்...?"

ரவி கேட்க சுகோத்தம் மேஜைமேல் இருந்த கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தார்.

''ஏற்கெனவே ஐந்து பேர்களை செலக்ட் செய்து வைத்து இருக்கிறேன். அவர்களை நீ இப்போது மானிட்டரில் பார்த்து தேர்வு செய்யலாம்...''

ஏகோத்தம் கீபோர்டில் சில எழுத்துக்களைத் தட்ட ஐந்து பேரின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்களும் அவர்களைப் பற்றிய விபரங்களும் கம்ப்யூட்டரின் மானிட்டர் திரையில் பளிச்சிட்டன.

என்.சர்வேஷ் பாண்டே

வி.துல்சிராம்

கே.ராஜவர்மா

ஜி.முகேஷ்சர்மா

என்.லால்சந்த்.

ஏகோத்தம் சொன்னார். ''இந்த ஐந்து பேரும் நம் இந்திய ராணுவத்துக்கும், நம் பாரத தேசத்துக்கும் விசுவாசமானவர்கள். இந்தியா என்ற பெயரைக் கேட்டாலே போதும் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். நாட்டுக்காக ரத்தத்தை சிந்த எந்த விநாடியும் தயாராக இருப்பவர்கள். இந்த ஐந்து பேரில் நீ யாரை வேண்டுமானாலும் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம்.''

ரவி கம்ப்யூட்டரின் மானிட்டர் திரையையே சில விநாடிகளுக்கு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ''ராஜவர்மா'' என்றான்.

''பெஸ்ட் சாய்ஸ்...''

சிரித்தார் ஏகோத்தம்.

## 6

நீல நிற நியான் 'ஹோட்டல் மூன்லைட்' பெயரை அதன் கட்டிட உச்சியில் திக்கி திக்கி எழுதிப் பார்த்துக் கொண்டிருந்தது.

தூங்கி வழியும் வரவேற்பறை இளைஞன் ராஜேந்திரனையும், சீமாவையும் போலீஸ் யூனிஃபார்மில் பார்த்ததும் தூக்கத்தை விரட்டியடித்துவிட்டு ''எஸ்'' என்றபடி எழுந்து நின்றான்.

ராஜேந்திரன் கேட்டார். ''வெளிநாட்டிலிருந்து வந்த ரெண்டு ' ஸ்டூடண்ட்ஸ் உங்க ஹோட்டல்ல தங்கியிருக்கிறதா கேள்விப்பட்டோம். உண்மையா...?''



''நேம் ஸார்...?''

''நேம் தெரியாது...''

''ஒரு நிமிஷம் ஸார்...'' என்று ஒற்றை விரலைக் காட்டிவிட்டு பக்கத்தில் இருந்த கம்ப்யூட்டரை கேட்டான். அது இரண்டு பேர்களின் பெயர்களை சிறிது யோசனைக்குப் பிறகு எழுதி காட்டியது. மைக்கேல், ரோவான். ரூம் நெம்பர்: 689.

''ஸார்...! ரூம் நெம்பர் 689-ல் ஸ்டே பண்ணியிருக்காங்க. என்ன விஷயம் ஸார்... அவங்க ரெண்டு பேரும் ஏதாவது பிரச்னையில் மாட்டிகிட்டாங்களா?''

''அவங்ககிட்ட என்கொய்ரி பண்ணின பிறகுதான் இது பிரச்னையா, பிரச்னை இல்லையான்னு தெரியும். எந்த ரூம் நெம்பர்ல ஸ்டே பண்ணியிருக்காங்க?''

''சிக்ஸ் எய்ட் நைன் ஸார்.''

''அவங்களுக்கு வெளியே இருந்து ஏதாவது போன் வந்ததா...?''

''எதுவும் வரலை ஸார். எங்கேயோ வெளியே போயிட்டு ஒன்பது மணிக்கெல்லாம் ரூம் திரும்பிட்டாங்க. பீச் ரெஸ்டாரண்ட்ல சாப்பிட்டாங்க.''

ராஜேந்திரனும் சீமாவும் பக்கவாட்டில் தெரிந்த லிஃப்ட்டுக்குள் போய் நின்றார்கள். ஆறாவது மாடிக்கு பட்டனைத் தட்ட அது உயர்ந்தது.

தளங்கள் கடந்து கொண்டிருக்க சீமா சொன்னாள்.

''ஸார்...! இந்த 'பாடி ஃபேப்ரிக்' ஆராய்ச்சி எனக்கென்னமோ அபத்தமாபடுது. காணாமல் போன சோனாவுக்கும் இந்த ஆராய்ச்சிக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்...?''

''பார்க்கலாம். இப்பத்தானே கேஸோட ஒரு நுனி கிடைச்சிருக்கு. இந்த வெளிநாட்டு பசங்களை ரெண்டு தட்டு தட்டினா விஷயங்கள் கிடைக்கும்ன்னு நினைக்கிறேன்...''

லிஃப்ட் நின்று கதவு இரண்டாய் பிளந்து ஆறாவது மாடியின் வராந்தாவைக் காட்டியது. இருவரும் வெளிப்பட்டு அறையிருட்டான வராந்தாவில் நடந்து 689 எண்ணிட்ட அறைக்கு முன்பாய் வந்து நின்றார்கள். அழைப்பு மணிக்குரிய பொத்தானை அழுத்தினார். அது

உள்ளே 'விர்ர்ர்ர்' என்றது.

கதவு திறக்கப்பட காத்திருந்தார்கள். முழுதாய் ஒரு நிமிஷம் கரைந்த பின்னாடியும் கதவு திறக்கப்படாமல் போகவே மறுபடியும் காலிங் பெல்லுக்கு வேலை கொடுத்தார்... ராஜேந்திரன்.

கதவு திறக்கப்படலை.

"குடிச்சுட்டு நல்லா தூங்கறாங்க போலிருக்கு"

மூன்றாவது முறையாய் காலிங் பெல்லை அடிக்க முயன்ற விநாடி - பின்பக்கம் அந்த நடை சத்தம் கேட்டது.

திரும்பினார்கள்.

அந்த ரூம் பேரர் யூனிஃபார்மோடு நின்றிருந்தான். சொன்னான்.

"அந்த ரூம் பூட்டியிருக்கு ஸார். தங்கியிருந்த ரெண்டு பேரும் வெளியே போயிருக்காங்க."

"எப்ப போனாங்க...?"

"பத்து மணி இருக்கும் ஸார்."

ராஜேந்திரன் வராந்தாவின் மூலையில் இருந்த இண்டர்காம் டெலிபோனை நோக்கிப் போனார். ரிஸீவரை எடுத்துக்கொண்டு ரிசப்ஷனிஸ்ட் இளைஞனைத் தொடர்பு கொண்டார்.

"இந்த ரெண்டு பேரும் ரூம்ல இல்லை. நீங்க இருக்கிறதா சொன்னீங்க...?"

"ஸாரி ஸார்...! நான் கௌண்டர்ல பிஸியா இருக்கும்போது அவங்க வெளியே போயிருக்கலாம். நான் நோட் பண்ணலை."

"சரி...! இந்த ரூமுக்கு டூப்ளிகேட் சாவி இருக்கா...?"

"இருக்கு ஸார்..."

"கொண்டாங்க..."

சாவியைக் கொண்டு வந்தான் ரிசப்ஷனிஸ்ட் இளைஞன். லாக் சிஸ்டத்தின் துவாரத்துக்கு சாவியைக் கொடுத்து திருக, கதவு நெகிழ்ந்து பின்வாங்கியது. தள்ளிக் கொண்டு உள்ளே போனார்கள்.

அறை துப்புரவாய் இருந்தது. ஹேங்கரில் பேண்ட் சர்ட் டைபாயின் மேல் நாளிதழ்கள்.

"சீமா! வார்ட் ரோப்பைத் திற."

திறந்தாள்.

வார்ட் ரோப்புக்குள்ளே இரண்டு லெதர் பேக்குகள், பக்கம் பக்கமாய் தெரிந்தது.

"ரெண்டையும் எடு..."

எடுத்து கட்டிலின் மேல் கிடத்தினாள் சீமா.

ராஜேந்திரன் பேக்குகளின் ஜிப்புகளைப் பிடித்து இழுக்க இரண்டும் திறந்து கொண்டது.

உள்ளே-

இரண்டு பேக்குகளையும் அடைத்துக் கொண்டு நீள நீளமாய் பென்சில் வடிவத்தில் உலோகக் குச்சிகள்.

'என்ன இது...?'

ஒரு குச்சியைக் கையில் எடுத்தார். கண்களில் வியப்பு பரவியது. பனிக்கட்டியைத் தொட்ட மாதிரி ஜில்லிப்பாய் இருந்தது அந்த உலோகக் குச்சி.

## 7

இந்திய எல்லையில் நாற்பதாயிரம் அடி உயரத்தில் அந்தக் குட்டி விமானம் பறந்து கொண்டிருந்தது. கீழே அடர்ந்த காடு.

ரவி விமானத்தைச் செலுத்திக் கொண்டிருக்க பக்கத்தில் ராஜவர்மா உட்கார்ந்திருந்தான். உணர்ச்சி பிழம்பாக இருந்தான்.

"தீவிரவாதிகளை அழித்து துவம்சம் செய்ய எனக்குக் கிடைத்து இருக்கிற இந்த வாய்ப்பு வேறு யார்க்கும் கிடைக்காத ஒன்று. போர்ட்டபிள் மிஸைல் லாஞ்ச் ஜெனரேட்டரும் நாம் சொன்னபடி கேட்குமா?"

"கேட்கும். எல்லாமே வெகு துல்லியம். பத்து குட்டி மிஸைல்களை அனுப்பி வைத்தால் போதும். மிர்ஜேகன் பள்ளதாக்கில் இருக்கும் நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் சாம்பல் மேடாய் கிடப்பார்கள்.

"நினைக்கும்போதே பரவசமாக இருக்கிறது. ஒரு தீவிரவாதியைக்கூட நாம் தப்ப விட்டுவிடக்கூடாது."

ரவி சிரித்தான்.

"தப்பிக்க முடியாது. அவர்கள் எல்லோரும் பொறியில் மாட்டிக்கொண்ட எலிகள். இப்படியொரு ரகசிய பயணம் மேற்கொள்வது உனக்கும், எனக்கும் நம் ஆபீஸர் ரமேஷுக்கும் மட்டும் தெரியும். பாகிஸ்தானின்று எஸ் ஐ

உளவுப்படை ஆசாமிகள் இந்நேரத்துக்கு கம்பளியைப் போர்த்திக் கொண்டு தூங்கிக் கொண்டிருப்பார்கள்."

"ரோஹித் காட்டுப்பகுதிக்கு எத்தனை மணிக்கு போய்ச் சேர்வோம்...?"

"காசிம்பாத்திலிருந்து இரண்டரை மணி நேர பயணம். நாம் புறப்பட்டு இப்போது ஒன்றரை மணி நேரம் ஆகிவிட்டது. இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் ரோஹித் காட்டுப்பகுதியைத் தொட்டுவிடுவோம்."

ரவி சொல்லிக் கொண்டிருக்கும் போதே வயர்லஸ் அசாத்து 'பீப் பீப்' என்று கூப்பிட்டது.

ராஜவர்மா ஹெட்போனை எடுத்து தலையில் கவிழ்த்துக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

"எஸ்..."

மறுமுனையில் ஒரு முரட்டுக்குரல் கேட்டது. "இது பாகிஸ்தான் ஃப்ளைட் கண்ட்ரோல் டவர். பறந்து கொண்டு இருப்பது இந்திய விமானமா...?"

ராஜவர்மா திடுக்கிட்டுப் போய் ஹெட்போனைக் கழற்றிவிட்டு ரவியிடம் தாழ்ந்த குரலில் விஷயத்தைச் சொல்ல ரவி முகம் மாறி சில வினாடிகள் யோசித்துவிட்டு வயர்லஸ் ஹெட்போனை எடுத்து தன் தலையில் மாட்டிக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

"இது இந்திய விமானம் கிடையாது. ஆப்கான் நாட்டு விமானம்."

"பொய்...! ஆப்கான் நாட்டு விமானங்கள் பறக்கும் நேர அட்டவணை எங்களுக்குத் தெரியும். அது இந்திய விமானம்தானே! எங்கள் காஸ்மிக் ரேடார் சாதனத்தை ஏமாற்றிவிட்டு எந்த விமானமும் பாகிஸ்தான் எல்லை ஓரம் பறக்க முடியாது. விமானத்தை கீழே இறக்கு..."

"இது எங்கள் இந்திய வான எல்லை. எங்கள் எல்லைக்குள் பறக்க யார் அனுமதியும் வேண்டியது இல்லை."

"முட்டாள்...! போன வருடத்து வான எல்லை வரைபடத்தை வைத்துக்கொண்டு இன்னமும் பழைய நினைப்பிலேயே பறந்து கொண்டிருந்தால் எப்படி...? நாங்கள் புதிதாய் தயாரித்து வெளியிட்டுள்ள வான எல்லை வரைபடத்தை வைத்துக் கொண்டு வானத்தில் பறக்க



வா..."

ரவி கோபத்தில் வெடித்தான். "நீங்களாகவே தயாரித்து வைத்துக் கொள்ளும் வான எல்லை வரைபடம் எங்களைக் கட்டுப்படுத்தாது. சர்வதேச வான எல்லைப்படி எங்கள் இந்திய எல்லையில் நாங்கள் இப்போது பறந்து கொண்டிருக்கிறோம்."

"விமானத்தை கீழே இறக்கி எங்களிடம் சரணடையாவிட்டால் தயவு தாட்சண்யம் பார்க்காமல் விமானத்தை சுட்டுத் தள்ளுவோம். விமானம் மறுபடியும் இந்திய எல்லைக்குள் போகக்கூடாது."

"ஏன் இப்படி அநியாயத்தையும் அக்கிரமத்தையும் கையில் எடுத்துக் கொண்டு அராஜகம் செய்கிறீர்கள்? எங்களுடைய இந்திய வான எல்லையை உங்களுடைய எல்லையாக நீங்களே நிர்ணயம் செய்துகொண்டு மிரட்டுவது சரியில்லை."

"கதை பேசிக்கொண்டிருக்க வேண்டாம். விமானத்தை இப்போது கீழே இறக்க முடியுமா முடியாதா...?"

ரவி மௌனம் சாதிக்க மறுமுனைக்குரல் கோபமாய்க் கேட்டது.

"என்ன பேச்சையே காணோம்?"

"கீழே அடர்ந்த காடு. விமானத்தை இறக்க முடியாது..."

"அதைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம். விமானத்தை நேர் வடகிழக்கே செலுத்திக் கொண்டு வா. எண்பதாவது கிலோமீட்டரில் காட்டுக்கு மத்தியில் ஒரு சிவப்புக் கொடி பறந்து கொண்டிருக்கும். உங்களை மாதிரியான சட்ட விரோதமாய் பறக்கும் விமானங்களை தரையிறக்குவதற்காகவே ஒரு ரன்வேயை நிர்மாணம் பண்ணியிருக்கோம். இப்போது நீ செய்ய வேண்டியது எல்லாம் விமானத்தை வடகிழக்காய் செலுத்துவது மட்டுமே. விமானம் வேறு திசை நோக்கிப் பறந்தால் அந்த நிமிஷமே எங்கள் 'ஆன்ட்டி எக்ஸ்ப்ளோஸிவ்' பீரங்கி உங்கள் விமானத்தை சுட்டு வீழ்த்தும்."

மறுமுனையில் வயர்லஸ் அணைந்து போக ரவி ஹெட்போனைக் கழற்றிவிட்டு வியர்வை முகமாய் ராஜவர்மாவைப் பார்த்தான்.

"இது ராடாருக்கு சிக்காத விமானம். எப்படி

பாகிஸ்தானின் ஃப்ளைட் கண்ட்ரோல் டவர் ராடார்க்கு சிக்கியது என்று தெரியவில்லை; எமகாதகன்களாக இருக்கிறார்கள்."

"இப்போதுஎன்னசெய்வது...?"

"என்னசெய்யலாம்...சொல்...?"

## 8

'STARC' என்று சுருக்கமாய் அழைக்கப்படும் 'சௌத் இன்டியன் டெஸ்டிங் அண்ட் ரிசர்ச் சென்டர்'. கண்ணாடி சுவர்களால் சூழப்பட்ட அந்த வரவேற்பறையின் சோபாவில் சாய்ந்திருந்தார்கள் ராஜேந்திரனும் சீமாவும். சீமா கேட்டாள்.

"பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட அந்த உலோக குச்சிகள் என்னவாக இருக்கும்னு நினைக்கறீங்க ஸார்?"

"லேப் டெக்னீஷியன் நூர் முகம்மது இப்போ டெஸ்ட் பண்ணி சொல்லிடுவார். யூ ஹேவ் டு வெயிட்."

சீமா தோள்களைக் குலுக்கி பெருமூச்சுவிட்டாள்.

"ஸார்...! நடந்த விஷயங்கள் எல்லாமே ஒன்னுக்கு ஒன்னு தொடர்பு இல்லாமே இருக்கு. கார் விபத்து, உலக அழகி சோனாமாயம், புரொஃபசர் தத்தா... அவரோட 'பாடி ஃபேப்ரிக்' ஆராய்ச்சி... கடைசியா அந்த வெளிநாட்டு மாணவர்கள். அவங்க ரூம்ல கிடைச்ச இந்த உலோகக் குச்சிகள். எனக்கென்னவோ நாம விஷயங்களைத் தப்பான கோணத்துல பார்த்துட்டு இருக்கோமோன்னு தோணுது... ஸார்."

ராஜேந்திரன் சிரித்தார். "சரி... இந்தக் கோணம் தப்புன்னு நீ நினைச்சா வேற எந்த கோணம் இருக்கு?"

"எனக்கு ஒரு கோணம் தோணுது ஸார்"

"சொல்லு..."

"சோனா உலக அளவில் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு அப்சரஸ்தனமான அழகி. அவ மேல ஆசைப்பட்டு யாராவது கடத்திக் கொண்டு போயிருக்கலாம். அப்புறம் ரேஷ்மான்னு ஒரு பொண்ணு. அவள் அழகிப் போட்டியில் சோனாவுக்கு சரியான போட்டியாளரா இருந்திருக்கா. ரொம்பவும் பொறாமை பிடிச்ச பொண் அந்த ரேஷ்மா. தனக்கு அழகிப்



பட்டம் கிடைக்கலையேங்கிற காரணத்துக்காக அவகூட ஏதாவது பண்ணியிருக்கலாம். மூணாவதா இன்னொரு முக்கியமான காரணமும் இருக்கு ஸார்."

"சொல்லு..."

"மித்ராயினிங்கிற இளம் பெண் சாமியாரை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்... பேப்பர்ல போட்டோ பார்த்திருக்கேன்."

"அந்த இளம்பெண் சாமியாரும், அவளோட சிஷ்யகோடிகளும் உலக அழகிப் போட்டியை எதிர்த்து கடுமையாய் போராட்டம் நடத்தினாங்க. பெண்மையை விளம்பரப்படுத்தற இந்த அழகிப் போட்டிகளால உலகத்துக்கு கெடுதல்னு புலம்பிட்டிருந்தாங்க.... அழகிப் போட்டிகள் நடத்தறதால பெண் தெய்வங்களின் கோபத்துக்கு இந்த உலகம் ஆளாகி அழிஞ்சிடுமாம்..."

ராஜேந்திரன் சிரித்தார்.

"வெரி இன்ட்ரஸ்டிங்...! உலகம் அழியப்போகுதுன்னு சாமியார்கள் சொல்லவேண்டியது இல்லை. இனி ஒரு உலக யுத்தம் வந்தா எந்த ஒரு நாடாவது கைதவறி அட்டமிக் பட்டனை ப்ரஸ் பண்ணினா போதும் இந்த உலகத்துல ஒரு புல்பூண்டு கூட மிஞ்சாது. சரி! அந்த சாமியாரிணியும் அவளோட சிஷ்யகோடிகளும் சோனாவை ஏதாவது பண்ணியிருப்பாங்கன்னு நினைக்கறியா...?"

"மே... பி... ஸார்..."

"விபத்து நடந்த இடத்தில் புரொஃபசர் தத்தாவோட விசிட்டிங் கார்டு இருந்ததே...?"

"அது நம்மை ஐ... மீன் போலீஸை திசை திருப்பற முயற்சியா ஏன் இருக்கக்கூடாது?"

"எனக்கு அப்படி தோணலை சீமா. புரொஃபசர் தத்தாவுக்கும் சோனா காணாமே போனதுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கு..." ராஜேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே லேப் டெக்னீஷியன் நூர் முகம்மது கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே வந்தார். முகம் பூராவும் வியப்பு அலையடித்துக் கொண்டிருந்தது.

"மிஸ்டர் ராஜேந்திரன்! இந்த உலோக ஸ்டிக்குகள் உங்களுக்கு எங்கேயிருந்து கிடைச்சதா சொன்னீங்க?"

"மூன்லைட் ஹோட்டல்ல தங்கியிருந்த ரெண்டு வெளிநாட்டு மாணவர்களோட கிட்டேயிருந்து..."

"இப்ப அவங்க எங்கே...?"

"தேடிக்கிட்டு இருக்கோம். இன்னும் கிடைக்கலை. இது என்ன மாதிரியான உலோக ஸ்டிக்குகள்ன்னு சொல்ல முடியுமா...?"

"இது ஒரு புதுவகை உலோகமா இருக்கு. அணுக்களின் கட்டமைப்பும், மூலக்கூறுகளும் வித்தியாசமான எண்ணிக்கையில் அமைஞ்சிருக்கு. ஆக்ஸைடுகள் கலந்த ப்ளுடோனியம் மாதிரியான உலோகம்."

"இது எதுக்கு உபயோகப்படும்?"

"இந்த ஸ்டிக்குகளை உபயோகப்படுத்தி அணு ஆயுதங்களை தயாரிக்கலாம். ராணுவத்துக்கு பயன்படும்."

ராஜேந்திரனும் சீமாவும் திகைப்பாய் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"புரொஃபசர் தத்தாவோட பாடி சிகேப்சர்ஸ் ஆராய்ச்சியும் ராணுவத்துக்கு பயன்படக்கூடிய ஒண்ணுன்னு சொன்னாரே"

"ராணுவ விஷயங்களுக்கும் சோனாவுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்...?" ராஜேந்திரன் யோசனையைக் குழப்பமாய் வழவிக் கொண்டிருக்கும்போதே நூர் முகம்மது சொன்னார்.

"இந்த ஆக்ஸைடுகள் கலந்த ப்ளுடோனியம் ஸ்டிக்குகளை அட்டாமிக் ரிசர்ச் சென்டர்க்கு கொண்டு போய் அவங்க கஸ்டடியில் வெச்சுடறது பெட்டர். என்ன இதுல நிகழ்ன்னு கதிர் இயக்க கசிவு ஏற்படலாம்."

"அதை உடனடியா பண்ணிடறோம்" ராஜேந்திரன், சீமா எழ முயன்ற விநாடி - லேபின் உள்ளேயிருந்து ஒரு நபர் வெளிப்பட்டார். ராஜேந்திரனை ஏறிட்டார்.

"ஸார்...! உங்களுக்கு போன். சப்-இன்ஸ்பெக்டர் ஜீவானந்தம் லைன்ல இருக்கார்."

ராஜேந்திரன் எழுந்து உள்ளே போய் மேஜையின் மேல் கவிழ்ந்து கிடந்த டெலிபோன் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

"சொல்லுங்க ஜீவானந்தம்"

"ஸார்...! நீங்க உடனடியா புரொஃபசர் தத்தாவோட



பங்களாவுக்கு வரணும்."

"என்ன விஷயம்?"

"தத்தா இறந்துட்டார் ஸார்."

"எ... எ... எப்படி...?" ராஜேந்திரன் திணறும் குரலில் கேட்டார்.

"தெரியலை... ஸார்... ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி தான் அங்கேயிருந்து தகவல் வந்தது. நான் இப்ப அங்கே போயிட்டிருக்கேன். நீங்களும் வந்துருங்க..."

## 9

விமானம் பறந்து கொண்டிருக்க ராஜவர்மா சில விநாடிகள் யோசித்துவிட்டு சொன்னான்.

"அவர்கள் சொல்படி நாம் நடந்து கொள்வோம். இல்லாவிட்டால் விமானத்தை சுட்டு வீழ்த்திவிடுவார்கள். சில மணி நேரமாவது நாம் உயிரோடு இருக்க வேண்டுமென்றால் விமானத்தை வடகிழக்காக செலுத்துவதுதான் உத்தமம்."

"அவர்கள் கையில் மாட்டிக்கொண்டால் நம்மை சித்ரவதை செய்தே கொன்றுவிடுவார்கள்."

"கடவுளின் கருணை நமக்கு இருந்தால் நம்மால் தப்பிக்கவும் முடியும்."

விமானத்தை வடகிழக்காக திருப்பினான் ரவி.

"இன்றைக்கு நமக்கு நாள் சரியில்லை. இப்படி ஒரு இக்கட்டில் மாட்டிக் கொள்வோம் என்று கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை. ஏகோத்தம் நம் இருவர் மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்து அனுப்பினார். அவரை ஏமாற்றிவிட்டோம்..."

"விமானத்தை அவர்கள் சொன்ன இடத்துக்கு கொண்டு போவதற்கு முன்னால் இந்த போர்ட்டபிள் பிளைவ்ளையும் ஜெனரேட்டரையும் கீழே தள்ளிவிடலாம். இது அவர்களின் கண்களில் பட்டுவிட்டால் நம்மை நடத்துகிற விதம் இன்னமும் மோசமாக இருக்கும்..."

"இப்போதே தள்ளிவிட்டு விடலாமா?"

"உடனே செய்ய வேண்டும்"

ரவி விமானத்தை ஓட்டிக் கொண்டிருக்க ராஜவர்மா

விமானத்தின் பின்பகுதிக்குப் போய் போர்ட்டபிள் சிலைண்டரையும் ஜெனரேட்டரையும் ஸ்லிட் வழியாக கீழே தள்ளிவிட அவை அடர்ந்த காட்டின் இருட்டை நோக்கிப் போயின.

வயர்லஸ் மறுபடியும் 'பீப் பீப்' என்று கூப்பிட்டது. ரவி அதை எடுத்து செவிமடுக்க குரல் சிரித்தது.

"இப்போது உன்னுடைய விமானம் சரியான திசையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இதே திசையில் வந்து கொண்டிருக்க வேண்டும். கொஞ்சம் திசைமாறிப் போனாலும் விமானம் நடுவானத்தில் ஒரு தீப்பிழம்பாய் மாறும்."

"உங்கள் சொற்படி கேட்டு வந்து கொண்டிருக்கிறோம். அவசரப்பட்டு விமானத்தை சுட்டு வீழ்த்திவிட வேண்டாம்... விமானத்தை நீங்கள் எங்கே இறக்கச் சொல்கிறீர்களோ அங்கே இறக்க நாங்கள் தயாராய் இருக்கிறோம்."

"இது புத்திசாலித்தனம். இந்தியர்களுக்கு இப்போதெல்லாம் புத்தி நன்றாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டது என்று சொன்னார்கள். அப்போது நான் நம்ப வில்லை. இப்போது நம்புகிறேன்..."

"உங்களுக்கே புத்தி வேலை செய்யும்போது எங்களுக்கு அது வேலை செய்யாமல் இருக்குமா...?"

"நீ இப்போது ஆபத்தில் இருக்கிறாய். எதையும் யோசனை பண்ணிப் பேசு. விமானத்தில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்...?"

"என்னையும் சேர்த்து இரண்டு பேர்"

"ஆயுதங்கள் ஏதாவது...?"

"ஒன்றும் இல்லை. வீ ஆர் ஆர்ம்லஸ் அண்ட் ஹார்ம்லஸ். எல்லையோர பாதுகாப்பை சரிபார்க்க இந்த விமானத்தில் புறப்பட்டோம்."

"நம்ப முடியவில்லை..."

"நீங்கள் நம்பினாலும் சரி... நம்பாவிட்டாலும் சரி இதுதான் உண்மை."

"சரி... உங்களிடம் இப்போது பிஸ்டல்கள் கூட இல்லையா...?"

"இரண்டு பிஸ்டல்கள் மட்டும் இருக்கின்றன"



"அவற்றை இந்த நிமிடமே கீழே போட்டு விடுங்கள். விமானம் நாங்கள் சொன்ன இடத்தில் தரையிறங்கும் போது உங்கள் இருவரிடமும் ஒரு குண்டூசி கூட இருக்கக் கூடாது..."

ரவி கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னான். "இருக்காது...! ஆனால் எங்களிடம் இந்திய ராணுவத்துக்கே உரிய தைரியமும் மன உறுதியும் இருக்கும்."

"வா... அதையும் சோதித்துப் பார்த்துவிடலாம்."

குரல் சிரித்துவிட்டு வயர்லஸ்ஸை அணைத்தது.

## 10

புரஃபசர் தத்தாவின் ஆராய்ச்சிக்கூடம் நூறு சதவிகிதம் கலைந்து போயிருந்தது.

கண்ணாடிகள் உடைந்து போயிருந்ததில் சுதந்திரம் பெற்ற வெள்ளை எலிகள் மேஜைகளின் நீளமான பரப்புகளில் மருட்சியோடு ஓடிக்கொண்டிருந்தன. பிப்பெட், டியூப், கண்ணாடிச் சில்லுகள் பூட்ஸ் கால்களில் நொறுங்க ராஜேந்திரனும் சீமாவும் உள்ளே போனார்கள். எதையும் கலைக்காமல் போலீஸ் சம்பிரதாயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்க - வொர்க்கிங் டேபிளுக்கு பக்கத்தில் மல்லாந்து விழுந்து கிடந்தார் தத்தா. அவருடைய மார்பில் ஓவர் கோட்டைத் துளைத்துக் கொண்டு அளவு எடுத்தது போல் வட்டமாய் ஒரு ரத்தப் பொத்தல்.

ராஜேந்திரன் அந்த ரத்தப் பொத்தலைப் பார்த்துவிட்டு பக்கத்தில் இருந்த ஃபாரன்ஸிக் அதிகாரியிடம் திரும்பினார்.

"காயத்தைப் பார்த்தா சாதாரண துப்பாக்கியில் சுட்டமாதிரி தெரியலையே...?"

"யூ... ஆர்... கரெக்ட் ஸார். இது லேசர் துப்பாக்கியால சுட்ட காயம். உடம்பு சிதையாமே, ரத்தம் சிதறாமே மரணம்."

ராஜேந்திரனின் பார்வை இப்போது அழுது கொண்டிருந்த பூர்வாவின் மேல் விழுந்தது.

"என்ன நடந்தது மிஸ் பூர்வா...?"

"ஒன்றும் புரியலை இன்ஸ்பெக்டர். நான் கம்ப்யூட்டர் ரூம்ல ஒரு ப்ராஜக்ட் ரிப்போர்ட்டை ப்ரிப்பேர் பண்ணிக்

கொண்டிருந்தேன். திடீர்னு ரிசர்ச் ரூமிலிருந்து ஏதோ சத்தம் கேட்டமாதிரி இருந்தது. இன்டர்காம் பண்ணிப் பார்த்தேன். லைன் கிடைக்கலை. உடனே புறப்பட்டு வந்தேன். ரிசர்ச் ரூம் உள்பக்கம் 'லாக்'காகியிருந்தது. தட்டிப்பார்த்தேன். உள்ளேயிருந்து எந்தசத்தமும் வராமே போகவே கூர்க்காவைக் கூப்பிட்டு கதவை உடைச்சு உள்ளே வந்து பார்த்தப்ப அறை இந்த கோலத்துல இருந்தது. புரஃபசர் வொர்க்கிங் டேபிளுக்குப்பக்கத்தில் விழுந்துகிடந்தார்."

பங்களா கூர்க்கா குறுக்கிட்டு சொன்னான்.

"ஸார்...! இந்த சம்பவம் நடக்கிறதுக்கு ஒரு மணி நேரத்துக்கு முந்தி ரெண்டு பேர் மோட்டார் பைக்கில் ரோட்டுப் பக்கம் அடிக்கடி போனாங்க. போகும்போதும் வரும்போதும் பங்களாவையே பார்த்தாங்க."

"அவங்களெப்படியிருந்தாங்க...?"

"ரெண்டு பேருமே ஹெல்மெட் போட்டிருந்தாங்க முகங்களே தெரியலை..."

"பைக் நம்பரை நோட் பண்ணினியா?"

"பார்க்க முடியலை ஸார்... பைக்ல போகும்போது வேகமா போனாங்க."

"என்ன பைக்?"

"ஆர் எக்ஸ் மாதிரி தெரிஞ்சது ஸார்"

சீமா, ராஜேந்திரனிடம் திரும்பினாள். "ஸார்...! அவங்க ரெண்டு பேரும் மூன்லைட் ஹோட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டு மாணவர்களாய் இருக்கலாம்."

"அவங்க நோக்கம் புரஃபசர் தத்தாவைக் கொலை செய்யறதாக மட்டும் இருந்திருந்தா இப்படி ரிசர்ச் ரூமையே களேபரமாக்கியிருக்க வேண்டியது இல்லை."

"எதையோ தேடியிருக்காங்க ஸார்..."

"பூர்வா! ஏதாவது காணாமே போயிருக்கான்னு பாருங்க..."

"பார்த்துட்டேன் ஸார். பாடி சீகேப்சரிங் சம்பந்தப்பட்ட ஃபைல்களையெல்லாம் புரட்டிப் பார்த்திருக்காங்க. சில பக்கங்களை கிழிச்சு எடுத்துட்டும் போயிருக்காங்க."

"வந்தவங்க நேத்து வந்த வெளிநாட்டு மாணவர்களாக இருக்கலாமோ?"



"அப்படி சொல்ல முடியாது இன்ஸ்பெக்டர்...! புரஃபசரின் இந்த பாடி சீகேப்சரிங் ரிசர்ச் மேல் வெளிநாட்டு ஏஜெண்ட்ஸ் பலபேர்க்கும் ஒரு கண். இந்த ரிசர்ச் சிஸ்டத்தையே ஒரு பெரிய தொகைக்கு விலை பேச பலரும் முயற்சி பண்ணினாங்க. ஆனா புரஃபசர் யாருக்கும் மசியலை. இந்த பாடி சீகேப்சரிங் ரிசர்ச்சோட முழு உபயோகமும் இந்திய ராணுவத்துக்கு மட்டுமே உரிமையானதுன்னு சொல்லிட்டார். அதைத் தவிர இன்னொரு விஷயமும் சொல்லியிருக்கார் ஸார்."

"என்ன...?"

"புரஃபசர்க்கு எதிரிகள் அதிகம். அந்த எதிரிகளால் எந்த நிமிஷமும் அவரோட உயிர்க்கு ஆபத்து ஏற்படலாம் என்கிற நிலைமை இருந்தது. அதனால என்னைக் கூப்பிட்டு இப்படி ஒரு தடவை சொல்லியிருக்கார். அவரோட மரணம் இயற்கையானதாக இல்லாமல் ஒரு கொலையாக இருந்தா அவரோட பேங்க் லாக்கரை திறந்து பார்க்கச் சொல்லியிருக்கார். இதை ஒரு ரகசியம் போல என்கிட்ட சொல்லி வெச்சிருந்தார்."

"இஸிட்...? லாக்கர் சாவி?"

## 11

சரியாய் இருபது நிமிடப் பயணம்.

எண்பதாவது கிலோமீட்டரில் காட்டுக்கு நடுவில் ஒரு சிவப்புக்கொடி பறக்க ரவி விமானத்தை கீழ் தாழ்த்தினான். ராஜவர்மா ஆச்சர்யப்பட்டான்.

"இந்தியாவின் எல்லைப்பகுதிகளில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இவ்வளவு தூரம் ஊடுருவியிருப்பது ஆச்சர்யமாக உள்ளது... நம் பாதுகாப்புபடை என்னதான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை..."

"எப்போதுமே திருடனுக்கு சாமர்த்தியம் அதிகம். நாம் எவ்வளவோ திட்டம் போட்டு மிர்ஜோன் பள்ளத்தாக்கில் இருக்கும் தீவிரவாதிகளை அழிக்கப் புறப்பட்டோம். ராடாரின் பார்வைக்கு புலப்படாத விமானம் இது. இருந்தாலும் அவர்களின் ராடார்திரைக்கு மாட்டிக் கொண்டோம்."

விமானம் இன்னமும் கீழ் தாழப் பறந்து உயரம் இழக்க,

பறந்து கொண்டிருந்த சிவப்புக் கொடிக்கு அப்பால் செடி கொடிகளை அகற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த ஒரு ரன்வே தெரிந்தது.

"கில்லாடிகள்" ராஜவர்மா பிரமித்தான்.

"எல்லாம் வெளிநாட்டு தீவிரவாத தலைவர்களின் ஆராதகர்களா..."

"நம்மால் இவர்களிடமிருந்து தப்பிக்க முடியுமா?"

"முயற்சித்தால் முடியாதது எதுவும் கிடையாது. நம் ராணுவத்தில் நமக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள்."

விமானம் ரன்வேயில் இறங்கி சிறிது தூரம் ஓடி நின்றதும் அடர்த்தியான மரங்களின் மறைவிடப் பகுதிகளிலிருந்து பச்சை நிற யூனிஃபாரம் அணிந்த பாக். தீவிரவாதிகள் கைகளில் எல்.எம்.ஜி. களோடு ஓடி வந்தார்கள். ஹிந்தி தவிர எல்லா மொழிகளையும் பேசிக்கொண்டு சூழ்ந்தார்கள்.

ரவியும் ராஜவர்மாவும் விமானத்திலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும் போதே ஒருவன் தன் கனமான பூட்ஸ் காலால் எட்டி உதைத்தான்.

"விமானத்தில் பறந்து வேவு பார்க்க வந்தீர்களா?"

வயிற்றில் விழுந்த உதைகளை தாங்கிக் கொள்ள முடியாமல் இருவரும் சுருண்டு விழுந்தார்கள்.

"கெட்...அப்..."

கால்களால் எத்தினார்கள். உதடுகளில் கசியும் ரத்தத்துடன் எழுந்து நின்ற இருவரின் கைகளும் கட்டப்பட்டன. தொடர்ந்து கண்கள். வெளிச்சம் புக முடியாத கெட்டியான துணி. கறுப்பு காகிதத்தை ஒட்ட வைத்தமாதிரி இருட்டு.

"ம்...நடங்கள்..."

இருவரும் தட்டுத்தடுமாறி நடந்தார்கள். நடக்கத் தடுமாறியபோது தள்ளப்பட்டார்கள்.

சுற்றிலும் பூட்ஸ் சத்தங்கள். இடையிடையே காட்டுப் பறவைகளின் கத்தல்கள். செடி கொடிகளின் உரசல்கள்.

சுமார் அரைமணி நேர நடைக்குப் பின் இருவரும் நிறுத்தப்பட்டார்கள். கண்களில் கட்டியிருந்த பட்டை அவிழ்க்கப்பட்டது.



ரவியும் ராஜவர்மாவும் கண்களை கசக்கிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார்கள்.

அடர்ந்த காட்டின் மையம் அது. சுற்றிலும் மரங்கள் வானத்தை நோக்கி கிளைகளை பரப்பியிருக்க, மரங்களுக்கு நடுவில் கான்வாஸ் துணியாலான இரண்டு டெண்ட்டுகள் தெரிந்தன.

பனிமூட்டம் லேசாய் பரவியிருந்தது.

இரண்டு பேர்களின் முதுகுகளிலும் துப்பாக்கிகள் இடித்தன.

"ம்... நடங்கள்..." ஒரு டெண்ட்டை நோக்கி தள்ளிப் போனார்கள். டெண்ட்டுக்குள் பேட்டரியால் இயங்கும் மினி டியூப் லைட்கள் வெளிச்சத்தை நிரப்பியிருக்க மையமாய் நாற்காலி போட்டு அதில் ராணுவ அதிகாரி ஒருவர் சிகரெட் பிடித்தபடி சாய்ந்திருந்தார். அவருக்குப் பின்னால் பாகிஸ்தான் நாட்டுக் கொடி குண்டூசிகளால் குத்தி வைக்கப்பட்டிருந்தது.

சிகரெட்டை பூட்ஸ்காலுக்கு கொடுத்து தேய்த்து விட்டு அந்த அதிகாரி எழுந்தார். யூனிஃபாரத்தின் சட்டைப் பாக்கெட்டில் 'அப்துல் வாசிம்' என்ற நேம் பேட்ச் தெரிந்தது. தீவிரவாதிகளில் ஒருவன் சொன்னான்.

"விமானம் மூலமாக வேவு பார்க்க வந்த அந்த இரண்டு பேர் இவர்கள்தான்..."

அப்துல் வாசிம் தன் இடது கையை நீட்ட தீவிரவாதிகளில் ஒருவன் தன் இடுப்பில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அவருடைய கையில் திணித்தான்.

அப்துல் வாசிம் உதட்டில் இப்போது ஒரு குரூரப் புன்னகை. பார்வை இரண்டு பேர்களின் மேலும் மாறி மாறி விழுந்தது.

"எனக்கு உண்மை வேண்டும். உங்கள் இரண்டு பேரில் முதலில் யார் உண்மையைச் சொல்கிறார்களோ அவர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கப்படும். வேளாவேளைக்கு உணவு கிடைக்கும். சித்ரவதை கிடையாது. முதலில் யார் முந்திக்கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே சலுகை."

ரவியும் ராஜவர்மாவும் தலைகளை குனிந்து கொண்டு மௌனமாய் நின்றார்கள்.

"உங்கள் இருவருடைய நாட்டுப்பற்றையும் காட்ட இது சரியான இடம் கிடையாது. உங்களுக்கு முழுதாய் பத்து நிமிஷ நேரம் அவகாசம். அந்த பத்து நிமிஷ நேரத்துக்குள் முதலில் யார் வாயைத் திறந்து உண்மையைச் சொல்கிறார்களோ அவர்களுக்கு உயிர்ப் பிச்சை. உண்மையைச் சொல்லாவிட்டால் இரண்டு பேருமே உயிரை விட வேண்டி வருதுதான்... அதுவும் ஒரே தோட்டாவில் ஒரே நேரத்தில் இரண்டு பேரும் செத்துப் போவீர்கள். ஒரே தோட்டா மூலம் இரண்டு பேர் எப்படி உயிரை விட முடியும் என்று யோசிக்கிறீர்களா? ராஜேஷ்! அது எப்படி என்பதை இவர்களுக்கு செய்துகாட்டு"

அப்துல் வசீம் சொல்ல தீவிரவாதிகளில் ஒருவரான ராஜேஷ், ரவியையும் ராஜவர்மாவையும் முதுகோடு முதுகு சேர்த்து நிற்க வைத்தான். இரண்டு பேர்களையும் ஒரே கயிற்றால் கட்டினான். இப்போது ரவியின் முகம் கிழக்கு திசையைப் பார்க்க ராஜ வர்மாவின் முகம் மேற்கு திசையைப் பார்த்தது.

அப்துல் வசீமின் கையிலிருந்த துப்பாக்கி இப்போது ரவியின் உதட்டின் மேல் படிந்தது.

"வாயைத்திற..."

ரவி வாயைத் திறக்க துப்பாக்கி உள்ளே நுழைந்தது. ரவிக்கு மூச்சுமுட்ட அப்துல் வசீமின் உதட்டில் இப்போது புன்முறுவல் ஒன்று பிறந்தது.

"இந்த நிமிஷம் என் துப்பாக்கி உன் தொண்டைக்குள் இருக்கிறது. நான் ட்ரிக்கரை அழுத்தினால் என்னாகும் தெரியுமா...? தோட்டா உன் தொண்டையை பொத்தல் போட்டுக் கொண்டு உன் முதுகோடு சேர்த்துக் கட்டப்பட்டு இருக்கிற உன் கூட்டாளியின் பின் மண்டையை சிதறடிக்கும். சில நிமிஷ வித்தியாசங்களில் இரண்டு பேர்க்குமே உயிர் பிரிந்துவிடும். உங்களுக்கு எப்படி வசதி...? வாயைத் திறந்து எதுவும் பேசாமல் இரண்டு பேரும் ஒன்றாய் செத்துப் போய்விடுகிறீர்களா... இல்லை உண்மையைச் சொல்லப் போகிறீர்களா...?"

ரவியும் ராஜவர்மாவும் மௌனம் சாதிக்க அப்துல் வசீமின் குரல் தொடர்ந்தது.

"கொடுத்த பத்து நிமிஷ அவகாசத்தில் ஐந்து நிமிஷம் இப்போதே கரைந்து போய்விட்டது. இனி மீதி இருப்பது ஐந்து நிமிஷம். சரியாய் 300 விநாடிகள். இந்த 300 விநாடிகளுக்குள் பதில் சொல்லாவிட்டால் 301-வது விநாடி இந்த துப்பாக்கி வெடிக்கும். உன் தொண்டையும் ராஜவர்மாவின் மூளையும் ஒரே நேரத்தில் சிதறும்..."

ரவியும் ராஜவர்மாவும் தலைகளைக் குனிந்து கொண்டு மௌனமாயிருக்க விநாடிகள் குறைய ஆரம்பித்தன - 299, 298, 297, 296, 295, 294...

## 12

இரவு பதினோரு மணி.

பரங்கிமலை ராணுவ கண்டோன்மென்ட் போலீஸ் ஜீப் பாதுகாக்கப்பட்ட எல்லைக்குள் நுழைந்து ஒரு அரைஇருட்டான கட்டிடத்துக்கு முன்பாய் நின்றது. ராஜேந்திரன், சீமா, பூர்வா மூன்று பேரும் இறங்க, சென்ட்ரி ஒருவர் எதிர்கொண்டு மங்கலான வெளிச்சம் பரவியிருந்த வராந்தாவில் கூட்டிக்கொண்டு போனார்.

சில நிமிஷ நடையில் வாஃபிஸ் டெக்னிகல் ஆபீசர் டொமினிக் அறை வந்தது. அவர்களுக்காக காத்து இருந்த டொமினிக் எழுந்து நின்று கைகுலுக்கி வரவேற்றார்.

"வெல்கம் டு எவ்ரிபடி... ப்ளீஸ் ஸிட்டவுன்"

நாற்காலிகளைக் காட்டிவிட்டு தானும் உட்கார்ந்தார். கேட்டார்.

"சொல்லுங்கள்... என்ன விஷயம்...? காணாமல் போன சேனாவைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?"

"ஸாரி...! இல்லை... வீ ஆர் ட்ரையிங்"

"இன்வெஸ்டிகேஷன் எந்த அளவில் உள்ளது...?"

"தமிழக போலீஸ் அண்டை மாநில போலீஸ் முழு வீச்சில் சேனாவை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளது."

"புரபசர் தத்தாவின் கொலையுண்ட சம்பவத்துக்கும் சேனா காணாமல் போன சம்பவத்துக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?"

"எதுவும் புரியவில்லை. புரபசர் தத்தாவுக்கு தொழில் ரீதியாய் எதிரிகள் அதிகம். அவர் செய்து வந்த பாடி ரீகேப்சரிங் டெஸ்ட்டும் ஆராய்ச்சியும் உலக அளவில் பிரபலமாயிருக்க அந்த ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட ரகசிய

ஃபார்முலாக்களை வாங்க எல்லா நாட்டு ராணுவமும் முயற்சி பண்ணியிருக்கு. அதுக்காக பெரிய தொகையும் பேசப்பட்டிருக்கு. டாக்டர் தத்தா பணத்துக்கு ஆசைப் படாமே - 'பாடி ரீகேப்சரிங் சிஸ்டம்' இந்திய ராணுவத்துக்கு மட்டுமே உபயோகப்படணும்ன்னு ஆசைப்பட்டார்.

அவர் கடைசி வரைக்கும் அதில் உறுதியாய் இருக்கவே மற்ற நாட்டு ராணுவ உளவுப்படை ஆசாமிகள் டாக்டர் தத்தாவை நேரிலும் போனிலும் மிரட்டியிருக் காங்க. ஆனா அவர் எதுக்கும் அசைந்து கொடுக்கலை."

"இந்த விபரமெல்லாம் உங்களுக்கு எப்படி கிடைத்தது? யார் சொன்னாங்க...?"

"அவருடைய பேங்க் லாக்கரை இன்று காலை திறந்து பார்த்தபோது அதில் ஒரு ஆடியோ கேஸட் இருந்தது. அந்த கேஸட்டை டேப் ரிக்கார்டரில் போட்டுப் பார்த்தோம். அந்த கேஸட்டில் தத்தாவே பேசியிருந்தார். பாடி ரீகேப்சரிங் டெஸ்ட் சம்பந்தமாய் அவர் சில ரகசியக் குறிப்புகளையும் சொல்லியிருக்கார். லாக்கர்க்குள் இரண்டு கம்ப்யூட்டர் டிஸ்க்குகள் இருந்தன."

பூர்வா குறுக்கிட்டுச் சொன்னாள். "இந்த இரண்டு கம்ப்யூட்டர் டிஸ்க்குகளிலும்தான் பாடி ரீகேப்சரிங் சம்பந்தப்பட்ட எல்லா டெக்னாலஜிகல் அண்ட் பயாலஜி கல் ஃபேக்டர்ஸும் உள்ளன. இந்த ஃபேக்டர்ஸ்களை உபயோகப்படுத்தி பாடி ரீகேப்சரிங் ப்ராஸஸை வெற்றிகரமாய் செயல்படுத்தலாம்."

ராஜேந்திரன் தான் கொண்டு போயிருந்த ப்ரீஃப்கேஸைப் பிரித்து உள்ளேயிருந்து இரண்டு ஆடியோ கேஸட்களை யும் இரண்டு கம்ப்யூட்டர் டிஸ்க்குகளையும் எடுத்து மேஜையின் மேல் வைத்தார். டொமினிக்கை ஏறிட்டபடி சொன்னார்.

"இந்த இரண்டு ஆடியோ கேஸட்களும் இரண்டு கம்ப்யூட்டர் டிஸ்க்குகளும் இன்றைய நிலவர விலைப்படி பத்து கோடி டாலர்கள். இவற்றை முறைப்படி பத்திரமாக உங்களிடம் ஒப்படைக்கத்தான் வந்தோம்... இவைகளை வைத்திருக்க எங்களுக்கு அனுமதியில்லை..."

டொமினிக் புன்னகைத்தார்.

"இதைப் பற்றிய தகவல் எனக்கு ஏற்கெனவே



பாதுகாப்புத்துறை அமைச்சகத்திலிருந்து வந்துவிட்டது. இந்த கேஸட்டுகளையும் சி.டிக்களையும் வாங்கிக் கொண்டு போக டெல்லியிலிருந்து இரண்டு முக்கிய அதிகாரிகள் நாளை வருகிறார்கள்."

டொமினிக் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இன்ஸ்பெக்டர் ராஜேந்திரனின் மேல் பாக்கெட்டில் இடம் பிடித்திருந்த செல்போன் முனகி முனகிக் கூப்பிட்டது.

எடுத்தார். காதுக்குப் பொருத்தினார்.

"எஸ்..."

"ராஜேந்திரன்...?"

"ஸ்பீக்கிங்..."

"விஜயகுமார்... ஃப்ரம் க்ரைம் ப்ராஞ்ச்"

"சொல்லுங்க விஜய்..."

"நீங்க உடனே [illegible] ஹாஸ்பிடலுக்கு புறப்பட்டு வரணும்..."

"என்ன விஷயம்...?"

"சோனா கிடைச்சுட்டா..."

"ரியலி...? எ... எ... எப்படி...?"

"போன்ல எதுவும் வேண்டாம். நேர்ல வாங்க."

"இதோ...! கிளம்பிட்டேன்"

ராஜேந்திரன் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார். கூடவே சீமாவும் பூர்வாவும் புறப்பட்டார்கள்.

## 13

பாகிஸ்தான் ராணுவ அதிகாரி அப்துல் வசீம் விநாடிகளை எண்ணிக் கொண்டிருக்க -

முதுகோடு முதுகு சேர்த்துக் கட்டப்பட்ட ரவியும் ராஜாவர்மாவும் தலை குனிந்து அப்படியே நின்றிருந்தார்கள்.

முன்னூறு விநாடிகள் எண்ணி முடிக்கப்பட்ட நிலையிலும் அவர்கள் அப்படியே நின்றிருக்க அப்துல் வசீமின் கையில் இருந்த துப்பாக்கி உயர்ந்தது.

அதே விநாடி -

தீவிரவாதிகளில் ஒருவன் அப்துல் வசீமுக்கு கண்ஜாடை காட்டி கூடாரத்தின் ஓரமாய் கூட்டிக் கொண்டு போய் நிற்க வைத்து தாழ்ந்த குரலில் பேசினான்.

"இவர்களை இப்படி ஒன்றாக நிற்கவைத்துக்கொண்டு கேட்டால் வாயைத் திறக்கமாட்டார்கள். தோட்டாவை வாங்கிக் கொண்டு செத்து விழ்வார்களே தவிர உண்மையைச் சொல்லமாட்டார்கள். இரண்டு பேரையும் பிரித்து வைத்து தனித்தனியே விசாரணை செய்தால் உண்மை வெளியே வரும்... உடனடியாய்ச் சுட்டுக் கொல்வதில் ஒரு பிரயோஜனமும் இல்லை..."

சில விநாடி கண் மூடி யோசித்த அப்துல் வாசீம் பின்பு மெல்ல தலையை ஆட்டினார்.

"நீ சொல்வதும் சரிதான். முதலில் இரண்டு பேரையும் பிரி. ஒருவனை இதே டெண்ட்டில் விட்டு விட்டு இன்னொருவனை அடுத்த டெண்டுக்கு கூட்டிக்கொண்டு போ..."

அந்த தீவிரவாதி செயல்பட்டான். கயிற்றுக் கட்டுக்களை அவிழ்த்து ரவியை அங்கேயே விட்டுவிட்டு ராஜவர்மாவை பக்கத்து டெண்ட்டுக்கு கூட்டிக்கொண்டு போனார்கள்.

ரவியிடம் வந்தார் அப்துல் வாசீம். "எங்கள் ராணுவ முகாமின் சித்திரவதைகளைப் பற்றி உனக்குத் தெரியாது. உடம்பின் ஒவ்வொரு செல்லையும் கதற வைக்க எங்களுக்குத் தெரியும்..."

ரவி முதல் தடவையாய் புன்னகைத்தான்.

"நீங்கள் 300 விநாடிகளை எண்ணி முடித்த உடனேயே நான் உண்மையைச் சொல்ல வாயைத் திறந்தேன்."

"உண்மையா... என்ன உண்மை...?"

"என் சட்டையைக் கழற்றி என் மார்பின் இடது பக்கம் பாருங்கள்"

தீவிரவாதி ஒருவனுக்கு அப்துல் வாசீம் கண்ணைக் காட்ட அவன் ரவியை நெருங்கி சட்டையைக் கழற்றி இடது மார்பைக் காட்ட கழுகும் அதன் மேல் ஒரு நட்சத்திரக் குறியும் தீயினால் சுட்ட வடுக்கள் மாதிரி தெரிந்தது.

அப்துல் வாசீமின் பார்வையில் இப்போது பிரமிப்பும் சந்தோஷமும் பரவியது.

"இது... இது... ஈகிள் புனிதப்போர் தீவிரவாதக் குழுவின் குறியீடு ஆயிற்றே...?"

"நான் ஈகிள் புனிதப்போர் தீவிரவாதக் குழுவின் தலைவன். எனக்குத் தேவை பணம், பணம், பணம்... இந்திய ராணுவத்தில் பணியாற்றிக் கொண்டே என் இயக்கத்தை புஷ்டியாய் வளர்த்து வைத்து இருக்கிறேன். என் உடம்பில் இருப்பது இந்திய ராணுவ சீருடை. என் உடம்பு இயங்குவது இந்திய உணவால். ஆனால் என் விசுவாசம் எல்லாம் எனக்கு பணத்தை அள்ளி வீசும் பாகிஸ்தானுக்காக..."

"நீ சொல்வதை நான் எப்படி நம்புவது?"

"ஈகிள் புனிதப்போர் தீவிரவாதக் குழுவின் வயர்லஸ் ஃப்ரீக்வென்ஸி என் ஒன்பது நார்த் ஈஸ்ட். அதனுடன் தொடர்பு கொண்டு பேசிப்பாருங்கள். இயக்கத்தின் தண்டுவடமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் சபேஷ் உங்களோடு பேசுவான். "ஹலோ" என்று சொல்வதற்கு பதிலாக 'புனிதப்போர்' என்று சொல்ல வேண்டும்" - அப்துல் வாசீம் டெண்ட்டின் மூலையில் இருந்த வயர்லெஸ்ஸை நோக்கிப் போனார். ஃப்ரீக்வென்ஸியின் என் ஒன்பதை வடகிழக்குத்திசையில் தொடர்பு கொண்டார். குரல் கொடுத்தார்.

"புனிதப்போர்"

"புனிதப்போர். நான் சபேஷ். மறுமுனையில் யார்...?"

"நான் பாகிஸ்தான் ராணுவ அதிகாரி... அப்துல் வாசீம்..."

"என்ன விஷயம்...?"

"இந்திய ராணுவத்தில் பணிபுரியும் ரவி உங்கள் இயக்கத்தை சேர்ந்த நபரா...?"

"ஆமாம்...! எங்கள் இயக்கத்தின் மூளையே அவர்தான். அவருக்கு இப்போது என்ன...?"

"ஒரு ஆபத்தும் இல்லை. அவரை இந்திய ராணுவ வீரர் என்று நினைத்து சிறைபிடித்து வைத்துள்ளோம். அவர் 'ஈகிள்' இயக்கத்தைச் சேர்ந்த நபர் என்று சொன்னதால் உங்களோடு தொடர்பு கொண்டோம். உண்மை இப்போது தெரிந்து விட்டதால் இனி அவரை மரியாதையுடன் நடத்துவோம்..."

அப்துல் வாசீம் வயர்லஸ்ஸை அணைத்துவிட்டு ரவியை புன்னகையோடு ஏறிட்டார்.

"நல்ல வேளை... என் துப்பாக்கிக்கு நான் வேலை

கொடுக்கவில்லை."

"ராஜா வர்மா என்னோடு இருந்ததால் என்னால் வாயைத்திறந்து உண்மையைச் சொல்ல முடியவில்லை. நாட்டுப்பற்று இருப்பது போல காட்டிக் கொள்ள வேண்டியிருந்தது."

"சரி...! எதற்காக இந்த விமானப் பயணம்?"

"மிர்ஜோன் பள்ளதாக்கில் வந்து ஒன்று சேர்ந்து இருக்கும் நம் சகோதர தீவிரவாத இயக்கங்களை அழிப்பதற்காக எங்களுக்கு திட்டம் போட்டு கொடுக்கப்பட்டது."

அப்துல் வாசீம் முகத்தில் இப்போது கவலை.

"மிர்ஜோன் பள்ளத்தாக்கில் நம் தீவிரவாத குழுக்கள் ஒன்று சேர்வது இந்திய ராணுவத்துக்கு எப்படி தெரியும்?"

"இந்திய உளவுத்துறையில் இருப்பவர்கள் தூங்குவதேயில்லை போலிருக்கிறது. நம் இயக்கங்களின் நடமாட்டங்களை எப்படியோ வாசனை பிடித்து விடுகிறார்கள். இது இப்படியிருக்க இன்னொரு விஷயம் நாம் பெருமை கொள்ளும்படி இருக்கிறது"

"என்ன...?"

"சில உண்மையான இந்திய வீரர்களை ராணுவத்தில் பணிபுரிவதாக சொல்லிக் கொண்டு நம் இயக்கங்களுக்கு ஆதரவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்."

"உண்மையாகவா?"

"ஆமாம்...! என் கூடவே பணியாற்றிக் கொண்டிருந்த நகுல் என்பவன் உண்மையிலேயே ஒரு பாகிஸ்தானி. பெயரை மாற்றிக் கொண்டு இந்திய ராணுவத்தில் சேர்ந்து மறை முகமாக ஒரு புரட்சியையே செய்து வந்து இருக்கிறான். அவனை பாகிஸ்தானி என்று எப்படியோ மோப்பம் பிடித்துவிட்ட பார்டர் செக்யூரிட்டி ஆபீஸர் ஏகேந்தம் நகுலின் சுயரூபத்தை வெளியே கொண்டு வர என்னைக் கலந்தாலோசித்து ஒரு திட்டம் போட்டார். நகுல் அந்த திட்டத்தில் மாட்டிக் கொண்டு இப்போது ராணுவச் சிறையில் இருக்கிறான். அவனை மீட்டு நம் இயக்கத்துக்கு கொண்டு வந்தால் எத்தனையோ திட்டங்களை வெற்றிகரமாய் நிறைவேற்றலாம்... ஜகின் இயக்கத்தின் இப்போதைய முக்கியத் திட்டம் புபாசர் தத்தாவின் 'பாடி ரீ



கேப்சரிங்' ரிசர்ச் பற்றிய எல்லா பயோ - டெக்னிகல் ஃபேக்ட்ஸையும் கவர்ந்து செல்வதுதான். அதற்காக நம் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு பேர் வெளிநாட்டு மாணவர்கள் என்ற போர்வையில் சென்னைக்கு போயிருக்கிறார்கள். போலீஸ் அவர்களை மோப்பம் பிடித்து விட்டதால் கொண்டு போயிருந்த புரூடோனியம் பெல்லட் ஸ்டிக்குகளைக்கூட ஆயுத வியாபாரிகளுக்கு சப்ளை செய்யாமல் ஹோட்டல் அறையிலேயே போட்டு விட்டு ஓடி வந்து விட்டார்கள். அப்படி ஓடி வருவதற்கு முன் உபயோகமான காரியத்தைப் செய்துவிட்டு வந்திருக்கிறார்கள்.

"என்ன காரியம்?"

"பாடி ரீ கேப்சரிங் பயோ - டெக்னிகல் ஃபேக்ட்ஸ் கிடைக்காத கோபத்தில் புபாசர் தத்தாவின் லேப்புக்கு போய் அவரை லேசர் துப்பாக்கிக்கு பலியாக்கிவிட்டு வந்து விட்டார்கள்."

அப்துல் வாசீம் சிரித்தார்.

"மிக... மிக... நல்ல காரியம். நமக்கு கிடைக்காத ஒன்று வேறு யார்க்குமே கிடைக்கக் கூடாது. புபாசர் தத்தாவை ஆறு மாதங்களுக்கு முன்பே கொன்று இருக்க வேண்டும்"

"முயற்சி செய்தோம்... முடியவில்லை..."

அப்துல் வாசீம் சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டார்.

"இப்போது நாம் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன...?"

"மிர்ஜோன் பள்ளத்தாக்குக்கு தகவல் அனுப்பி நம் தீவிரவாத இயக்கங்களையெல்லாம் வேறு இடத்துக்கு போகச் சொல்ல வேண்டும்."

"அப்புறம்...?"

"நகுல் நம்முடைய ஆள். அவன் இப்போது இந்திய ராணுவச் சிறையில் இருக்கிறான். அவனை எப்படியாவது விடுவித்து நம்மோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்."

"அது முடிகிற காரியமா?"

"ஏன் முடியாது. என் மீது இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையை உபயோகப்படுத்திக் கொண்டு நகுலை

எப்படியும் வெளியே கொண்டு வந்து விடுவேன்..."

"இந்த ராஜவர்மாவை என்ன செய்யலாம்?"

"சுட்டுக் கொன்றுவிட வேண்டியதுதான்."

"அந்தக் காரியத்தையும் நீயே செய்துவிடு..." சொன்ன அப்துல் வசீம் தன் இடுப்பில் வைத்திருந்த ரிவால்வரை எடுத்து நீட்ட ரவி, அதைக் கீழே விழாமல் ஏந்திக்கொண்டான். பக்கத்து டெண்டில் ராஜ வர்மாவின் அலறல் சத்தம் கேட்டுக் கொண்டிருக்க ரிவால்வரோடு நடந்தான் ரவி.

டெண்டுக்குள் நுழைந்தான்.

ராஜவர்மா உடம்பில் துணியில்லாமல் தலைகீழாய் தொங்கிக் கொண்டிருக்க இரண்டு பேர் லட்டிகளோடு தெரிந்தார்கள்.

## 14

ரிச்மாண்டு ஹாஸ்பிடல்.

ராஜேந்திரனும் சீமாவும் ஹாஸ்பிடல் போய்ச் சேர்ந்த போது க்ரைம்ப்ராஞ்ச் விஜயகுமார் ஹாஸ்பிடலின் ரிசப்ஷனிலேயே கிடைத்தார்.

"என்ன விஜய்... சோனா... எங்கே...?"

"உள்ளே டாக்டர்ஸ் ட்ரீட்மெண்ட் கொடுத்துகிட்டு இருக்காங்க..."

"சோனா எங்கே போயிருந்தா...? எப்படி ட்ரேஸ் பண்ணினீங்க...?"

"ஆந்திரா எல்லையில் ரோட்டோரமா மயக்கமா கிடந்த சோனாவை ஒரு லாரி ட்ரைவர் பார்த்திருக்கார். சோனாவோட போட்டோவைப் பேப்பரில் பல தடவை பார்த்ததால அடையாளம் தெரிஞ்சுகிட்டு லாரியில் போட்டுக் கொண்டு வந்திருக்கார். சோனா கண் விழிச்சாத்தான் மத்த விவரமெல்லாம் தெரியும்."

"உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே?"

"நோ...நோ...ஷி ஈஸ் ஆல்ரைட். உடம்பில் ஒரு சின்னக் கீறல் கூட கிடையாது. பசியாலும் களைப்பாலும் ஏற்பட்ட மயக்கம்தான்..." க்ரைம்ப்ராஞ்ச் விஜயகுமார் சொல்லிக் கொண்டிருக்கும் போதே டாக்டர் சபிராஜன் மைனர் ஆப்ரேஷன் தியேட்டரிலிருந்து வெளிப்பட்டார்.

ராஜேந்திரன் கேட்டார்.

"ஹௌ ஈஸ் ஷி டாக்டர்?"

"ஷி ஈஸ் கெட்டிங் கான்ஷியஸ். நீங்க போய் பேசலாம்..."

மூன்று பேரும் உள்ளே போனார்கள். அந்தப் பெரிய அறையின் மையத்தில் சற்றே உயர்த்திப் போட்ட கட்டிலில் கலங்கிய ஒரு ஓவியம் போல் கிடந்தாள் சோனா. மலர்ந்திருந்த அவளுடைய பெரிய கண்களில் பயம் தெரிந்தது. போலீஸ் யூனிஃபார்மைப் பார்த்ததும் சோனா எழ முயல ராஜேந்திரன் கையமர்த்தினார். "அப்படியே படுத்துக்குங்க மிஸ் சோனா. உங்களை சிரமப்படுத்தக்க வேண்டாம்."

"நோ இன்ஸ்பெக்டர்! நவ் அயாம் ஆல்ரைட். நான் உங்ககிட்ட நிறைய பேச வேண்டியிருக்கு."

"சொல்லுங்க...! உங்களைக் கடத்திட்டு போனது யாரு...?"

சோனா படபடவென்று பேச ஆரம்பித்தாள். "மொத்தம் மூணு பேர். அவங்க ஏதோ தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவங்கன்னு நினைக்கிறேன். இந்தியாவை திட்டிகிட்டு இருந்தாங்க. அடிக்கடி வயர்லெஸ்ல யார்கிட்டயோ பேசினாங்க"

"சரி உங்களை எதுக்காக கடத்திட்டுப் போனாங்க...?"

"அது... வந்து..." என்று சில விநாடிகள் தயங்கிய சோனா பின்பு மெல்லிய குரலில் சொன்னாள்.

"இப்போ நான் சொல்லப்போகிற விஷயத்தை நீங்க பகிரங்கமா வெளிப்படுத்தக்கூடாது."

"நீங்க மொதல்ல விஷயத்தை சொல்லுங்க மிஸ் சோனா...!"

"புரபசர் தத்தாகிட்ட இருக்கிறபடி ஈகேப்சரிங் பயோ டெக்னிகல் ஃபேக்ட்ஸை எப்படியாவது வாங்கணும்ங்கிறது அந்த தீவிரவாதிகளோட நோக்கம். அதுக்காகத்தான் என்னைக் கடத்தினாங்க. தட்டிக் கேட்ட ட்ரைவரை காரோடு சேர்த்து ரோட்டோர பள்ளத்துல தள்ளிவிட்டாங்க."

"புரபசர் தத்தாவோட பாடி ஈ கேப்சரிங் பயோ டெக்னிகல் ஃபேக்ட்ஸை தீவிரவாதிகள் கேட்கிறதுக்காக உங்களை எதுக்காக கடத்திட்டு போகணும்...? உங்களுக்கும் புரபசர்க்கும் என்ன சம்பந்தம்...?"

"ரத்த சம்பந்தம்"

"ரத்தசம்பந்தமா?..."

"எஸ்..."

"புரியலையே..."

"நான் அவரோட பொண்ணு..."

"என்ன...?"

ஆச்சர்யத்தில் அந்த அறை ஒரு அரை நிமிஷ நேரம் தத்தளித்தது. பின் சோனாவே தொடர்ந்தாள்.

"நான் அவரோட பொண்ணுன்னு வெளியே யாருக்கும் தெரியாது. என்னோட அம்மா கல்கத்தாவில் ஒரு டிராமா ஆர்ட்டிஸ்ட். இருபது வருஷங்களுக்கு முந்தி அப்பா ஒரு ஆராய்ச்சி சம்பந்தமா கல்கத்தாவுக்கு வந்த போது அம்மாவுக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டு காதலாகி அந்தக் காதல் நெருக்கமாகி உறவா மாறியதின் விளைவு நான் பிறந்தேன். அப்பா, அம்மாவை முறைப்படி கல்யாணம் பண்ணிக்க விரும்பலை. உறவும் வெளியே தெரியாதபடிக்கு ஒரு இருட்டான வாழ்க்கையை வாழ ஆரம்பிச்சார். அதுக்கு வசதியா என்னையும் அம்மாவையும் கல்கத்தாவிலேயே விட்டுட்டு மெட்ராஸுக்கு வந்து இங்கேயே ஆராய்ச்சி அது இதுன்னு சொல்லி தனியா வாழ ஆரம்பிச்சார். அம்மாவும் அப்பாவோட மனப்போக்கை புரிஞ்சுகிட்டு அவர்கிட்ட எந்த உரிமையையும் கொண்டாடாமே ஒரு விரக்தியான வாழ்க்கையை வாழ்ந்துட்டு இறந்து போயிட்டாங்க. அதுக்கப்புறம் நான் மெட்ராஸ் வந்து அப்பாகிட்ட பேசிப் பார்த்தேன். அவர் என்னை தன்னோட மகள்னு சொல்லிக்க விரும்பலை. நானும் வற்புறுத்தலை. நான் ஒரு வெளிநாட்டு ப்யூட்டி பார்லரில் ரிசப்ஷனிஸ்ட்டா வேலை பார்த்துகிட்டே ப்யூட்டி காண்டெஸ்ட் பலதில் கலந்துகிட்டேன்; பல ஃபேஷன் பரேடுகளிலும் கலந்துகிட்டேன். உலக அழகிப் போட்டியில் கலந்துக்க இந்திய சார்பில் நான் அனுப்பப்பட்டேன். கடவுளோட கருணையால் உலக அழகிப்பட்டம் கிடைத்தது. அப்பாவுக்கு போன் பண்ணிச் சொன்னேன். அவர் சந்தோஷப்படலை. ஒரு வாழ்த்து கூட சொல்லாமே ரிஸீவரை வெச்சிட்டார். நான் அவரோட பொண்ணுன்னு தீவிரவாதிகளுக்கு மட்டும் எப்படியோ தெரிஞ்சு என்னை பிணைக் கைதியாய் உபயோகப் படுத்திக்க கடத்திகிட்டு போனாங்க. 'பாடி ரீ கேப்சரிங்'



ரிசர்ச் சம்பந்தப்பட்ட பயோ டெக்னிகல் ஃபேக்ட்ஸை தரலைன்னா உங்க பொண்ணை கொன்னுடுவோம்'ன்னு மிரட்டிப் பார்த்தாங்க. அவர் மசியலை. இந்தப் போராட்டம் நடந்துகிட்டு இருக்கும்போதே மூணு பேர்ல ஒருத்தன் என்கிட்ட தப்பா நடந்துக்கப் பார்த்தான். அதையொட்டி மூணு பேர்க்கும் சண்டை வர அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திகிட்டு நான் ஓடி வந்துட்டேன். அது எந்த ஏரியான்னு தெரியலை. ராத்திரி பூராவும் அந்தக் காட்டுப் பகுதியில் ஓடி வந்து பசியும் களைப்பும் தாங்க முடியாமே ரோட்டோரமா மயங்கி விழுந்துட்டேன். கண் விழிச்சு பார்க்கும் போது லாரியில் இருந்தேன். இப்போ இங்கே இருக்கேன்..."

பொறுமையாய் எல்லாவற்றையும் செவிமடுத்த ராஜேந்திரன் பின் மெல்லிய குரலில் கேட்டார்.

"இந்தியாவுக்கு எதிரா அந்த தீவிரவாதிகள் வயர்லஸ்ஸில் பேசினதா சொன்னீங்க... அப்படி என்ன பேசினாங்க?"

"இந்தியாவையும் இந்தியாவுல நடந்ததையும் கேவலமா பேசினாங்க. 'ரவி'ங்கிற பேர் அடிக்கடி அடிபட்டது. ரவியோட கட்டளைக்காக சில சமயங்களில் காத்துக் கிடந்தாங்க"

ராஜேந்திரன் விஜயகுமாரை ஏறிட்டார். "விஜய்...! இந்த விஷயத்தை உடனடியாய் பரங்கிமலை ராணுவ கண்டோன்மெண்டுக்கு தெரியப்படுத்தணும்"

"கண்டிப்பா..."

சோனா ராஜேந்திரனின் சட்டைபாக்கெட்டில் இடம் பிடித்திருந்த செல்போனைப் பார்த்துவிட்டு கேட்டாள்.

"கொஞ்சம் செல்போன் தர்றீங்களா... என் அப்பாவுக்கு போன் பண்ணி நான் பத்திரமா இருக்கிற விஷயத்தைச் சொல்லணும்."

"அதுக்கு அவசியமில்லை மிஸ் சோனா?"

சோனா முகம் மாறினாள்.

"நீ... நீ... நீங்க என்ன... சொ... சொல்றீங்க?"

தந்தை கொலை செய்யப்பட்ட விஷயத்தை எப்படி சொல்வது என்று சில விநாடிகள் தயங்கிவிட்டு, பின் வேறு வழியில்லாமல் சொல்ல ஆரம்பித்தார் ராஜேந்திரன்.

# 15

ரவி ரிவால்வரோடு டெண்ட்டுக்குள் நுழைய கையில் லட்டிகளோடு நின்றிருந்த இரண்டு தீவிரவாதிகள் விலகி நின்று கொண்டார்கள்.

உடம்பில் துணியில்லாமல் தலை கீழாய் தொங்கி கொண்டிருந்த ராஜா வர்மாவின் கண்களில் வியப்பு பயமும் வந்து அப்பிக் கொண்டது. உதடுகளில் ர... வி... என்ற எழுத்துக்கள் நடுங்கின.

ரவி பத்தடி தொலைவில் வாதியாய் நின்று கொண்டு ரிவால்வரால் ராஜவர்மாவை குறி பார்த்தான்.

"ஸாரி... ராஜா...! இது என் நண்பர்களோட இடம். நீ எதிரி இருக்கக்கூடாது. அடுத்த ஜென்மத்திலாவது பாகிஸ்தானில் வந்து பிற. அல்லது இந்தியாவுக்கு எதிராக துப்பாக்கியைத் தூக்கு."

ரிவால்வரை உயர்த்தினான். ராஜா வர்மா தலை கீழாக ஊசலாடிக்கொண்டே கத்தினான்.

"நோ... ரவி... நோ... ஓ... ஓ... ஓ... ஓ...!"

"வெரி வெரி ஸாரி ராஜா..." ரிவால்வரை உயர்த்தி ராஜவர்மாவின் மார்பைக் குறிபார்த்தான். அரை நிமிட நேரம் குறி பார்த்து ட்ரிக்கரை சுண்டினான்...

"ட்டுமீல்ல்..."

ரிவால்வர் வாயிலிருந்து புகை மட்டும் வந்தது தோட்டா பாயவில்லை.

ரவி குழப்பமாய் பிஸ்டலைப் பார்த்து திகைத்து கொண்டிருக்க பின்பக்கம் சிரிப்புச் சத்தம் கேட்டது.

ரவி திரும்பிப் பார்க்க இதயத்தில் விரிசல் விட்ட மாதிரி அதிர்ச்சி.

நகுல் நின்றிருந்தான். மார்பின் குறுக்கே கையை கட்டிச் சிரித்தான்.

"ந... கு... ல்... நீயா...?"

"நானே...!"

இரண்டடி முன்னால் வந்தான் நகுல். "உன் கையில் இருக்கும் துப்பாக்கிக்கு தோட்டாவை உமிழத் தெரியாது புகைவிட மட்டுமே தெரியும்... இது உன் நண்பர்களின் இடம் கிடையாது. எதிரிகளின் இடம்..."

ரவி குழப்பமாய் சுற்றும் முற்றும் பார்க்க டெண்ட்டின்



ஒருபகுதியிலிருந்து திரைச்சீலையைத் தள்ளிக்கொண்டு பாட்ச் செக்யூரிட்டி ஆபீஸர் ரசோத்தம் வெளிப்பட்டார்.

"ஸ... ஸார்..." ரவி திக்கித்துப் போக, அவர் புன்னகையோடு தொடர்ந்தார்.

"ரவி..! நீ நினைத்துக் கொண்டிருப்பது போல இது பாகிஸ்தான் எல்லை கிடையாது. இந்திய எல்லைக்கு உட்பட்ட இடம். விமானத்தைக் கீழே இறக்கியது பாகிஸ்தான் ஃப்ளைட் கண்ட்ரோல் கிடையாது. இந்தியாவின் ஃப்ளைட் கண்ட்ரோல் டவர்தான் பாகிஸ்தான் அதிகாரியைப் போல பேசியது. இந்தக் காட்டுப் பகுதி இந்திய எல்லைக்கு உட்பட்ட சஞ்சீவ் காட் ஃபாரஸ்ட். இங்கே இருப்பவர்கள் தீவிரவாதிகள் கிடையாது. இந்திய ராணுவ வீரர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக உன்னை உதைத்த அப்துல் வாசிம் பாகிஸ்தான் ராணுவ அதிகாரி கிடையாது. நம் இந்திய ராணுவத்தின் ரகசிய பிரிவு மேஜர் பஞ்சாபகேசன். தமிழ்நாட்டுக்காரர். இது பாகிஸ்தானின் ராணுவ முகாம் அல்ல. உன்னையும் உன் பின்னால் இருக்கக்கூடிய தீவிரவாதக் கும்பல்களையும் வெளிச்சத்துக்கு கொண்டுவர நாங்கள் போட்ட நாடக மேடை இது."

ரவி தூள் தூளாகிக் கொண்டிருக்க - நகுல் தொடர்ந்தான்.

"உன்னுடைய நடவடிக்கைகளின் மேல் எனக்கு ஆரம்பத்திலிருந்தே சந்தேகம். என் சந்தேகத்தை பாட்ச் செக்யூரிட்டி ஆபீஸர் ரசோத்தமிடம் சொன்னபோது உன்னை வலை விரித்துப் பிடிக்க திட்டம் போட்டார். திட்டத்தின் முதல் கட்டத்தில் என்னை எதிரியாய் உருவாக்கினார் ரசோத்தம். உன் மீது யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை என்பதை நீ நம்ப வேண்டும் என்பதற்காக நாங்கள் போட்ட திட்டத்துக்கு பலன் கிடைத்தது. ராஜவர்மா உன்னோடு கிளம்பியதும் எங்கள் திட்டத்தின் இரண்டாவது கட்டம். உன்னை பின் தொடர்ந்து வந்து இங்கே இந்த 'சஞ்சீவ் காட்' பகுதியில் அரங்கேறியுள்ளது. உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா ரவி...? [illegible] கூடிய எல்லா தீவிரவாத கும்பல்களையும் எங்கள் இந்திய ராணுவம் வேட்டையாடி விட்டது. இனி எல்லையோரப்



பகுதியில் ஒரு தீவிரவாதி கூட தலை தூக்க முடியாது. அப்படி தலை தூக்கினால் அந்த தலை இருக்காது."

மேஜர் பஞ்சாபகேசன் கனமான பூட்ஸ் சத்தத்தோடு ரவியை நெருங்கி அவன் தோள் மேல் கையை வைத்தார்.

"இந்திய தேசம் அன்புக்கு கட்டுப்பட்ட தேசம். யார் [illegible] அது சும்மா இருக்காது. நீயும் சரி உன் தீவிரவாத இயக்கங்களும் சரி இந்த இந்திய ராணுவத்[illegible] இந்திய ராணுவம் மாறிவிடும் வேண்டியது இல்லை. எங்கள் நாட்டை வல்லரசாக்கும் நல்ல முயற்சியில் நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம். குறுக்கே வாலை நீட்டாமல் ஒதுங்கி நில்லுங்கள். இல்லாவிட்டால் வால் இல்லா பல்லிகளாக காலம் பூராவும் வாழ வேண்டியிருக்கும்... எங்கள் இந்தியா பல மதங்களாலும் மொழிகளாலும் மாறுபட்டு இருப்பது போல உங்கள் மஞ்சள் காமாலைக் கண்களுக்குத் தெரியலாம். ஆனால் இந்திய எல்லையில் நீ ஒரு பிடி மண்ணைத் தொட்டால் போதும் இந்திய மக்கள் எல்லோரும் ஒரே மதமாக மாறிவிடுவார்கள். அந்த மதத்துக்குப் பெயர் நாட்டுப் பற்று. நீ உண்மையான இந்தியனாக இருக்க வாய்ப்பில்லை. இந்த ஜென்மத்தில் செய்த தப்புக்கு ஒரே ஒரு பிராயச்சித்தம்... அடுத்த ஜென்மத்திலாவது நீ உண்மையான இந்தியனாக பிறப்பதுதான்."

(முற்றும்)

'இந்த இதழில் ஓவியர் அரஸ்
வரைந்துள்ள இரண்டு படங்களில்
ஒரு தவறு இருக்கிறது.
அதை கண்டுபிடிப்பவருக்கு
தீபாவளி பரிசு காத்திருக்கிறது.

விடையை அனுப்ப வேண்டிய
கடைசி தேதி: 1.11.2000